பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு 2030 ஆடி 16ஞாயிற்றுக்கிழமை [01-08-1999] UTHAYAN A LivelyNationalTamilDaily கதிர்:212

## குச்சவெளிப் பகுதியில் 4 படையினர் பலி!

திருகோணமலை குச்சவெளி சலப்பையாறு என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் 4 படையினர் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வீதிக் கண்காணிப்புக்காக ரோந்து சென்ற படையினர் மீது பதுங்கியிருந்து புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும்—

இந்தத் தாக்குதலில் மேலும் 5 படையினர் காயமடைந்தனர் என்றும் —

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி - முல்லைத்தீவு அரச அதிபர்கள் இடமாற்றம்

### கொழும்புக்கு வருமாறு உத்தரவு

கொழும்பு ஒக. 1

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஆர். தர்மகுலசிங்கம் மற்றும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரி. இராசநாயகம் ஆகிய இருவரும் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான உத்தரவு நேற்று முன்தினம் மாலை வழங்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட முல்லைத்தீவு அரச அதிபர் ஆர். தர்ம

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண் உட்பட இருவருக்கு சூடு

மட்டக்களப்பு, ஒக. 1

அம்பாறை மாவட்டம் வளத்தாப்பிட்டியில் நேற்று இரவு இளம் பெண் உட்பட இருவர் சுடப்பட்டனர்.

வீட்டுக்கு வந்த இனம் தெரியாத நபர்கள் இவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்துள்ள இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரிலிருந்து கடல் மார்க்கமாக வினாத்தாள் இன்று வன்னிக்கு!

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, ஐ.நா.தூதரகம் வழித்துணை வழங்கும்

வவுனியா, ஓகஸ்ட் 1

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கானஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப்பரீட்சைக்குரிய வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள் மற்றும் காகிதாதிகள் மன்னாரிலிருந்து கடல் மார்க்கமாக இன்று வன்னிப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியவற்றின் வழித்துணையுடன் பரீட்சை வினாத்தாள்களை இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வினாத்தாள்களை கொண்டு செல்வதற்கு தரை மார்க்கமாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகமும், கடல் மார்க்கமாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் வழித்துணை வழங்கவுள்ளன.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் வவுனியாவிலிருந்து வன்னிப்பகுதிக்கான பரீட்சை இணைப்பாளர்களான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொன். சபாபதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சதாசிவம் ஆகியோர் பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் காகிதாதிகளை அகதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடல் ஊடான போக்குவரத்துக்கு அனுமதி

### புலிகள் நேற்று அறிக்கை

வவுனியா, ஒக. 1

திட்டமிட்டபடி ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கு உதவுவதற்காகவும்—

மேலதிக சிகிச்சைக்காக அவசர நோயாளிகளை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து வெளியே கொண்டு செல்வதற்காகவும்—மன்னார் கடல் ஊடான போக்குவரத்துக்கு தாம் அனுமதி வழங்கி இருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர் நேற்று விடுத்த அறிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 16 நாள்களாக மல்லாவியில் நடந்த மறியல்போராட்டம் நேற்று முடிவு

வவுனியா, ஓகஸ்ட் 1

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்குமாறு கோரி மல்லாவியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அலுவலகம் மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றின் முன்னால் கடந்த 16 நாள்களாக நடைபெற்றுவந்த மறியற் போராட்டம் நேற்று முதல் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன் இடம்பெற்று வந்த மறியற் போராட்டம் நேற்று பிற்பகல் 3.30 மணி அளவில் கைவிடப்பட்டது.

மல்லாவி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப்படையினர் சம்பந்தனுக்கு பாதுகாப்பு

### நீலனின் இறுதிச்சடங்கின்போது

கொழும்பு, ஒக. 1

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் திருகோணமலை மாவட்ட எம்.பியுமான இரா. சம்பந்தனுக்கு நேற்று விசேட அதிரடிப்படையினர் தீவிரப் பாதுகாப்பு வழங்கினர்.

தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தின் இறுதிக் கிரியைகள் நேற்று கனத்தையில் நடைபெற்றன.

அதில் கலந்து கொள்வதற்கு வந்தபோதே சம்பந்தனுக்கு தீவிரப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

கனத்தை மயானத்துக்கு சம்பந்தன் வந்தபோதும், திரும்பிச் சென்றபோதும் நான்கு வாகனங்களில் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

இதேவேளை — நீலன் திருச்செல்வத்தின் இறுதிக் கிரியை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிச்சைக்காரர் வேடத்தில் குண்டுதாரி நடமாடினார்

### பாதுகாப்பு தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 1

நீலன் திருச்செல்வத்தின் மரணத்துக்கு காரணமான தற்கொலைக் குண்டுதாரி கடந்த காலங்களில் பிச்சைக்காரர் வேடத்தில் திரிந்து நீலன் திருச்செல்வத்தின் நடமாட்டங்களை அவதானித்து வந்தார் என பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் பட்டியலில் நீலன் திருச்செல்வம் உட்பட மூன்று தமிழ் அரசியல்வாதிகளின் பெயர்கள் இடம்பெற்றிருப்பதாகவும்—

இது குறித்து அவர்களுக்கு பாதுகாப்புத் தரப்பு ஏற்கனவே எச்சரித்திருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் இந்தக் குண்டுத் தாக்குதலை அடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக விசேட திட்டம் ஒன்றை பாதுகாப்புத்தரப்பினர் மேற்கொண்டுள்ளனர்.

[இ-21]

## வன்னிக்கான பாதையை உடனடியாக திறவுங்கள்

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 1

''வன்னிக்கான போக்குவரத்துப்பாதையை உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்''.

மேற்கண்டவாறு யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட ஒன்றியக்குருக்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உணவு மற்றும் மருந்துப் பொருள்களின் பற்றாக்குறை வன்னியிலுள்ள எமது உடன்பிறப்புகளுக்கு சொல்லொணாத் துன்பங்களை ஏற்படுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பல் கட்டவேண்டுமா?

பல்லுப் போனால் சொல்லுப் போச்சு
என்னும் பழமொழிக்கே முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமா?
வாருங்கள்!

பலவருட அனுபவமுள்ள பல் கட்டுபவரினால்
உங்கள் பற்கள் கட்டப்பட்டு, கிளிப் போடப்படும்.

**எரிக்கணேஷ்**

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/8382) T. P. NO - 2486



தென்மராட்சி மக்கள்

# சுலபமாக ரீ. வி. டெக் திருத்த

தென்மராட்சி மக்கள் போக்குவரத்து சிரமமின்றி
ரீ. வி., டெக், றேடியோ, மணிக்கூடுகளை
திருத்திக்கொள்ளவும், சிரமமான திருத்த வேலைகளை
யாழ்ப்பாணத் தலைமையகத்தில் திருத்திக்கொள்ளவும்

**வீனஸ் டெல்கா**

11, பஸ் நிலையம், சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்)

[சி/8330]



# யாழ். மத்திய கல்லூரியின்

## 183 ஆவது
(1 – 08 99)

## பிறந்த நாளை முன்னிட்டு

யாழ். நகரில் முதன் முதலில் துடுப்பாட்டத்தை
அறிமுகப்படுத்தியவரான

**GEORGE WEBSTER**

ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான 6 பேர் கொண்ட 6 ஓவர் கிரிக்கட் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று 1 — 08 99 ஞாயிற்றுக்கிழமை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 1 30 மணிக்கு நடைபெறும்.

**3 ஆம் இடத்துக்கான போட்டி**

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்
எதிர்
ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகம்

**1 ஆம் இடத்துக்கான போட்டி**

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் (சொக்ஸ்)
எதிர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் (புளூஸ்)

பிரதம விருந்தினர்
Rev. & Mrs P. Nesakumar (Rural Dean Jaffna)

கௌரவ விருந்தினர்
K. Rajadurai (Principal, Jaffna Central College)

கே. கே. அருள்வேல்
தலைவர்
**பழைய மாணவர் சங்கம்**

என். செல்வநாயகம்
தலைவர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

(சி/8388)



# தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
யாழ்ப்பாண மாவட்டம்

## இளைஞர் பரிசளிப்புத்திட்டம்-கலாசாரம்

மாவட்ட இளைஞர், யுவதிகளை ஊக்குவிக்கும் வகையில் பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

குறுநாடகம், நடனம் (சாஸ்திரியம்)
நடனம் (கிராமியம்), கிராமியப்பாடல், புதியபாடல்,
சாஸ்திரியப்பாடல் (தனி/குழு), ஓவியம்,
சாஸ்திரிய வாத்தியங்கள், அறிவிப்பாளர், பேச்சு,
அபிநய நடிப்பு, கவிதை ஆக்கம், சிறுகதை,
கட்டுரை, சிறுவர் இலக்கியம், தொலைக்காட்சி
வானொலி நாடகம், சித்திரம்.

**வயதெல்லை: 18 — 30**

**விண்ணப்ப முடிவு: 07-08-1999**

மேலதிக விபரங்களுக்கு உடன் மாவட்ட அலுவலகம் அல்லது பிரதேச இளைஞர் சேவை அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

உதவி இயக்குநர்.
மாவட்ட அலுவலகம்,
தே. இ. சே. ம.
தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டிடம்,
யாழ்ப்பாணம்.

(சி/8384)


# ஆடிவேல் பவனி பக்திபூர்வமாக ஆரம்பம்

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது.

காலை 9 மணிக்கு தேவஸ்தானத்தில் இருந்து பூரண கும்பத்தை 'ஐராவதம்' யானை சுமந்துவர அதைத் தொடர்ந்து அசுரர்களை வதம் செய்ய முருகப் பெருமானுக்கு உதவிய நவவீரர்களைத் தாங்கிய ஊர்தியும் அதையடுத்து வேல் ரதமும் வீதிவழியாகப்பவனிவந்தன.

வேல் ரத பவனியில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். வீதியோரங்களில் உள்ள வீடுகளில் பூரண கும்பம் வைத்தும் பொதுமக்கள் வழிபாடு செய்தனர்.

தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ குமாரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் பஜனைக் கோஷ்டிகள் பண்ணிசைத்தபடி வந்து கொண்டிருந்தன.

நல்லை ஆதீன முன்றலில் அதன் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் பூரண கும்பம் வைத்து வழிபாடு செய்தார்.

நண்பகல் 12 மணிக்கு பவனி நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலைச் சென்றடைந்தது. அங்கே பிரதம குருக்கள் ரத பவனியை வரவேற்று பூசைகள் செய்தார். பிற்பகலில் மீண்டும் ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஐ-111)


**SHAMROCK**

பொருளியல்
Mr. இராஜேஸ்வரன் B Com
2001 - சந்தைப் பொருளாதாரம்
2000 - தேசிய வருமானசமநிலை உற்பத்தி செலவுக் கோட்பாடு

- Grade 5 - A/L வரை
- English Spoken And G. A. Q.
- English - Literature

(சி/8386



**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று
மணிவண்ணன், ரம்பா
நடித்த
**காதலர்தினம்**
(புதிய வெளியீடு)
நேரம்; 10-30, 2-30
(67708)



**ராஜா**
யாழ்ப்பாணம்
பிரபுதேவா - கஜோல்
மற்றும் பலர் நடித்த
**மின்சாரக் கனவு**
10-30, 2-00, 5.00
[சி/8354]



**நாகம்ஸ்**
சுன்னாகம்
ரஜனி - குஷ்பு - ஜனகராஜ்
நடித்த
**பாண்டியன்**
[illegible] 2-30
[புதிய நேரம்]
[67862]


# முழுநிலா கலைநிகழ்ச்சி

யாழ் கொட்டடி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் முழுநிலா கலைநிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நிலைய அரங்கில் தலைவர் இ. வே. கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா. கோபாலகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினராக கொட்டடி கிராம அலுவலர் ந. லிங்கேஸ்வரனும் கலந்துகொள்வார்கள்.

(இ)


# அனைத்துச் சேவைகளுக்கும் ஒரே நிறுவனம்

## சுப்பஸோ

சேவையில் ஒரு திருப்தி காண்பதே மகிழ்ச்சியென யாழ். நகரில் வீடியோ ஓடியோ துறையில் தமக்கென தனி முத்திரை பதித்த ''சுப்பஸோ''

அன்று முதல் இன்று வரை வெளிவந்த பாடல்களை ஒலிப்பதிவு நாடாவில் (''ஸ்பூல்'' இல்)

இசைத் தட்டில் (''றெக்கோட்ஸ்'' இல்)

கொம்பக்ட் டிஸ்க்கில் (''CD'' இல்)

இருந்து பாடல்களை உடனுக்குடன் சிறந்த முறையில் பதிவு செய்து கொள்ளவும்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான விழாவினை மென்மேலும் மெருகூட்டும் விதத்தில் திறமையான முறையில் வீடியோ படம் பிடித்திடவும்.

வர்ணப் புகைப்படம் பிடித்திடவும் இந்தியாவில் இருந்து வெளிவரும் திரைப்படங்களை உடனுக்குடன் V. C. D மூலம் சிறந்த முறையில் வீடியோ பதிவு செய்திடவும் புதிய ஓடியோ, வீடியோ CD க்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும்.

வீடியோ படப் பிடிப்பாளர்களுக்கு மிக்சிங் செய்து கொள்ளவும்.

அனைத்து சேவைகளையும் ஒருங்கிணைந்த ஒரேயொரு நிறுவனமாக கஸ்தூரியார் வீதியில் புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றது.

**சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்றர்**
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- வாடிக்கையாளர்களின் நன்மை கருதி மேலும் சில சேவைகளை மிக விரைவில் இணைக்கவுள்ளோம்.

(சி/8387)


# மரண அறிவித்தல்கள்

## ஞானிஐயர் கணேசஐயர்

துன்னாலை வடக்கைச் சேர்ந்த, ஞானிஐயர் கணேசஐயர் நேற்று சனி மாலை 5 மணியளவில் காலமானார். இவர் கோமதி அம்மாவின் அன்புக் கணவரும், மீனாட்சி அம்மா (இந்தியா), இலங்காதேவி, பூரணஐயா, வீரமணிஐயா, பொன்னம்மா, நாகேஸ்வரசர்மா, கேசவசர்மா, அகிலேஸ்வரசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 1 - 8 - 99 ஞாயிறு 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வீரமணிஐயா
(மகன்)
ஸ்ரீ அம்பாள் ஜுவலறீஸ்
நெல்லியடி.

இந்திர அம்மன் கோயிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(சி/8390)

## இராசரத்தினம் ஜெயக்குமார் (குமார்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் ஜெயக்குமார் அவர்கள் 29-7-99 வியாழக்கிழமையன்று காலமானார்.

அன்னார் மானிப்பாயைச் சேர்ந்த இராசரத்தினம்-அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் அளவெட்டியைச் சேர்ந்த ஜெகநாதன்-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சித்திராவின் அன்புக் கணவரும் திவாகர், திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பிரான்ஸைச் சேர்ந்தவர்களான சுகந்தி. ஜெயந்தி, சுகுமார், ஆனந்தி மற்றும் அருந்ததி, ஸ்ரீலச்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரான்ஸைச் சேர்ந்த செல்வராஜா, ஜெயக்குமார், வத்சலா ஜேர்மனியைச் சேர்ந்த ஜெயபாலன் மற்றும் ஜெயந்தி, சாந்தி, சுகந்தி, கஜந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் வினோதினி, நிஷாந்தி, நிரோஷன், சாருஜன், ஜெருசன், ஜெருஷிகா, டினா, டிலக்ஷனா ஆகியோரின் அன்பு மாமனாரும் மகாலட்சுமி, பாக்கியலட்சுமி, யோகலட்சுமி (பிரான்ஸ்), நித்தியலட்சுமி, சுப்பிரமணியம், நவரத்தினம் ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஸ்ரீஸ்கந்தராஜா, விக்னேஸ்வரி, ஜெகசோதி ஆகியோரின் அன்பு மருமகனும் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - கண்மணி தம்பதிகளினதும் கந்தர்மடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் - சுந்தரம்மா தம்பதிகளினதும் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (1-8-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இராசரத்தினம்
(தந்தை)

190, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(67870)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

யாழ். குடாநாட்டு உள்ளூர் உற்பத்திப்பொருள்களை கொழும்புக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் கலந்துரையாடுவதற்கு முதலாம் திகதி [1-8-99] பி. ப 3 மணிக்கு சிவன் கோயிலடியில் உள்ள பருத்தித்துறை வர்த்தக சங்க அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

யோ. தேவசகாயம்,
அமைப்பாளர்,
குடாநாட்டு ஏற்றுமதியாளர் சங்கம்,
பருத்தித்துறை.

(67857)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### யோ. திணேஷா

(இரண்டாம் ஆண்டு மாணவி
நல்லூர் காசிப்பிள்ளை மகாவித்தியாலயம்)

தாயாலே வந்தது 26 03- 1989
நோயாலே வெந்தது 01- 08- 1996

அழகிய மலருக்கு அழுத விழிகளுடன்

அழகிய மலரே நீ கருகியே வீழ்ந்த தென்ன?
காயாகிப் பழமாகி நீ பல்லாண்டு வாழ்வாய் என
எண்ணியே மகிழ்ந்திருந்தோமே.
பூதரித்து அரவணைத்த அன்னை
முகம் மறந்தனையோ?
அன்பு மொழி பேசியென்னை ஆட்கொண்ட
கண்மணியே

மடிதனிலே தவழ்ந்து மிடியழித்த பொன்மகளே
மண்ணிலே அன்னையென்னை மறந்து நீ
சென்றாயோ?
இரண்டாவது மகளாக வந்துதித்த திணேஷாவே
என் குஞ்சே உடை பட்டுப் போனதம்மா
உனையிழந்து ஊர் சொல்லும் நிலைக்கு
இன்று ஆளானேன்
எம் குடும்பக்குத்து விளக்கே கண்ணிலே
காணாமற் சென்ற தென்ன?
திணேஷாம்பாள் இல்லம் இன்று கண்ணீரில்
மூழ்கியே தத்தளிக்குதம்மா!

கல்லூரியின் வாழ்க்கையிலே கலந்திருந்தாயம்மா
எல்லோருக்கும் நல்லவளாய்ப் பொலிந்திருந்தாயம்மா
எதையும் தாங்கும் குணம் பெற்றிருந்தாயம்மா
சொல்லெனும் வாய்மையைக் காத்திருந்தாயம்மா
சுறுசுறுப்பாய் செயற்படக் கற்றிருந்தாயம்மா
சொல்லாமல் ஏன் திணேஷா சோகமெனச்
சூழ்ந்ததுவே!

உன் அப்பா, அம்மா, சகோதரர்கள் உனை எண்ணி
கலங்குதல் காணாயோ?
உன் அதிபர், ஆசிரியர்கள் உனைத் தேடி
அலைவதை அறிவாயோ?

உனதன்பு நண்பிகள் கண் கலங்குதலையும் பாராயோ?
திணேஷா நீ எங்கே?

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி சாந்தி சாந்தி!

தகவல்:
சோ. யோகராசா
திணேஷம்பாள் வெதுப்பகம்
அரச வீதி,
நல்லூர்.

(67849)

## அடிக்கல் நடும் வைபவம்

வீடமைப்பு அதிகாரசபையினால் சரவணை சின்ன மடுப் பகுதியில் அமைக்கப் படவிருக்கும் 35 வீடுகளுக்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எஸ். செல்வநாயகம் இந்த அடிக்கற்களை நட்டுவைத்தார். ஊர்காவற்றுறை பிரதேச சபைத்தலைவர் த. மதனராஜா உட்பட பல பிரமுகர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வீடுகளின் அமைப்புக்குமென 55 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி வீடமைப்புத்திட்டம் தொடர்பாக வீடமைப்பு அதிகார சபையினருடன் தொடர்பு கொண்டதை அடுத்தே வீடமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ 7)

## முதலுதவிப் பெட்டி அன்பளிப்பு

காரைநகர் ஓக. 1

காரைநகர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவினரால் முதலுதவிப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. [ஐ-73]

## ரீ.வியில் படம் பார்த்த இருவரிடையே கைகலப்பு

### ஒருவரின் கை துண்டிப்பு

வலி. கிழக்கு, ஓக, 1

வீடியோவில் சினிமாப்படம் பார்த்துக் கொண்டிருந்த இருவரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்தி வெட்டில் முடிவடைந்தது. ஒருவர் தனது கரத்தை முழங்கைக்குக் கீழே இழந்தார்.

நல்லூர் வடக்குப் பகுதியில் கடந்த புதன் இரவு இச் சம்பவம் இடம் பெற்றது.

தொலைக்காட்சி வாடகைக்குக் கொடுப்பது சம்பந்தமாக ஏற்பட்ட தகராறே இவ்வாறு கத்தி வெட்டில் முடிந்தது.

கல்வியங்காடு ஆடிய பாதம் வீதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவரின் கையே துண்டிக்கப்பட்டது.

(ஐ-5-180)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

### வெளிவாரி பட்டப் படிப்புகள் பதிவுக்கான திகதி நீடிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1998 / 1999 கல்வி ஆண்டுக்கான வெளி நிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்வதற்குரிய கால எல்லை 1999 - 08 - 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

— பதிவாளர்

1999 – 07 – 30 (சி/8372)

## கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் நன்மதிப்பைப் பெற்றது

### காவடி மார்க் கற்பூரம்

நின்று நிலைக்கும் ஜோதி மயம்
காவடி கற்பூரம் என்றும் தரும்




கற்பூரம் என்று கேட்காதீர்கள்!
'காவடி' என்று கேட்டு வாங்குங்கள்!!

ஏகவிநியோகத்தர்கள்:

### பிரபா டிரேடிங் கம்பனி

31, கபோஸ் லேன், கொழும்பு-11.
தொலைபேசி இல.: 329426, 422750

(சி/8369)

## கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி! ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்கு சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்!


கொழும்பில் தங்குவதற்கு மிகச்சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம். இன்றே விஜயம் செய்யுங்கள்.

**HOTEL SEIVAMS [GUEST HOUSE]**
No. 29A, SANGAMITHA MAWATHA
KOTAHENA, COLOMBO – 13.
T. P. No. 326522

(67894)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுத்துயரின் இரண்டாண்டு



| பகல் | இரவு |
|---|---|
| 17 | 01 |
| 05 | 08 |
| 1954 | 1997 |

அமரர் **ஆர். வி. எஸ். திருநாவுக்கரசு**
(ஆசிரியர்)

நீ
தொட்ட பணியை!
தொடர்ந்த பணியை!
இடையில்,
இயமனின் அறுப்பால்
இடறிவிட்ட பணியை!
தொடரப் பார்க்கின்றோம்.
நீ தொட்ட கல்விப் பணியின்
ஒரு தரிப்பை - அல்ல
காற்றரிப்பை.

அமரர் ஆர். வி. எஸ். திருநாவுக்கரசு நினைவு
கல்வி புலமைப் பரிசில் நிதியம்.

நெடுந்தீவு. [சி/8361]





மூவ் இடுப்பு வலி, மூட்டு வலி,
முதுகு வலி, வீக்கம், தசைப்பிடிப்பு
என்பவற்றுக்கான உடனடி நிவாரணி.




வலியில் ஆ... முதல்...ஆஹா வரை

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்,
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள்
வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சிலலறை கடைகள்

(சி/8051)


## வீடு சேதக் கொடுப்பனவு

சுன்னாகம், ஒக. 1

வன் செயல்களின் போது வீடுகள் சேதமடைந்த மீளக் குடியமர்ந்த மக்களுக்கான இரண்டாம் கட்ட நட்டஈட்டுக் கொடுப்பனவு வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 177 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது

தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ள இக் கொடுப்பனவைப் பயன்படுத்தி கூரை அமைத்தல் வரையான திருத்தங்கள் செய்து முடிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

25 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்நட்டஈட்டுக்கொடுப்பனவில் ஏற்கனவே 5 ஆயிரம் ரூபா வீதம் முதற் கட்டம் வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-27)

## மலசல கூடம் அமைக்க உதவி

கைதடி, ஒகஸ்ட் 1

கைதடி கிராம அலுவலர் பகுதிகளுக்குள் வசிக்கும் வசதியற்ற விதவைகள் பத்துப் பேருக்கு மலசல கூடம் கட்ட நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது

'யுனிசெவ் நிறுவனத்தினால் இந்த உதவி வழங்கப்படுகிறது தகைமையானவர்களைக் கிராம அலுவலர்கள் உதவியுடன் தென்மராட்சி பிரதேச செயலர் தேர்ந்து சிபார்சு செய்துள்ளார்.

(ஐ-74)

## பாராட்டு விழா

சுன்னாகம், ஓகஸ்ட் 1

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நால்வர் கலாபூஷணம் விருது பெற்றிருப்பதைக் கௌரவித்து, அவர்களைப் பாராட்டும் விழா நடைபெறவுள்ளது.

வலி வடக்குப் பிரதேச செயலகம் மற்றும் இப் குதி மக்களால் நடத்தப்படும் இவ் விழா எதிர்வரும் 9 ஆ[illegible] தி [illegible] 3 [illegible] ல் [illegible] ம் [illegible] ஷ் [illegible] யாலயத்தில் [illegible] பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-27)

## மல்லாகத்தில் திருட்டுகள அதிகரிப்பு

சுன்னாகம், ஓகஸ்ட் 1

மல்லாகம் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இப்பகுதியில் 15 வீடுகளில் திருட்டு இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது.

கடந்த வெள்ளியன்று கல்லாரை மற்றும் அதனை அண்டிய பகுதியில் பத்து வரையான வீடுகளில் திருட்டு இடம் பெற்றுள்ளது. இருவர் கொண்ட திருட்டுக் கும்பல் இத்திருட்டை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் ஒரே இரவில் ஐந்து வீடுகளில் திருட்டு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-27)


**JOGI HOME SCIENCE ACADEMY**

Fabric Painting புதிய வகுப்புகள் 09-08-99 அன்று திங்கள் முதல் ஆரம்பமாகும். 7 வகுப்புகள் மட்டும். சேரவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
75, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
[ நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக ]
[ 67819 ]

**A/L 2000 - LOGIC**
பிரத்தியேக வகுப்புகள்
**'உடன் அனுமானம்'**
ஆரம்பம்: 2-08-99 மாலை 5 மணி (பழைய)
★ இம்மாத நடுப்பகுதியில் பகுதி - II இற்கான புதிய விரிவுரைகள் ஆரம்பமாகும்.
★ வாராந்தம் 4 மணித்தியால வகுப்புக்கள் நடைபெறும்.
FURTHER EDUCATION
(உடுவில் மகளிர் கல்லூரி)
(67779)

ALL PURPOSE MULTI DIRECTIONAL
**KOBE-52**
TV/RADIO ANTENNA




- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax: 437736
10, Trelawny Place, (Behind Milk Bar) Bambalapitiya Junction, Colombo 4. Tel: 589992

(சி/8287)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பகல் | இரவு |
|---|---|
| 11 | 25 |
| 03 | 07 |
| 1927 | 1997 |

அமரர் **குட்டித்தம்பி கனகசபை**
(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

திதி: 01-08-1999

ஆண்டுகளிரண்டு கடந்தாலும்
நீங்காத நினைவலையாய் வீற்றிருக்கும்
எங்கள் பாசமிகு தந்தையே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

சந்நிதி வீதி,
இடைக்காடு
(67826)

## ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்
# ஆடிவேல் விழா



**01-08-99 ஞாயிற்றுக்கிழமை** இன்று காலை 9-00 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயிலில் இருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தை பகல் 12 மணிக்கு வந்தடையும். மாலை 3 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக மாலை 5 மணிக்கு ஆலயத்தை வந்தடையும்.

மங்களவாத்தியம் P. S. பிச்சையப்பா குழுவினர்

-தேவஸ்தானம்

விளம்பர அன்பளிப்பு: ஆ...க்கர் நகைப் பூங்கா
71, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(67707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பயன்தரா அணுகுமுறை

வன்னியில்மக்கள் உணவின்றித் தவிக்கிறார்கள் நீங்களோ உணர்வின்றி இருக்கிறீர்களே?- என்றுசம்பந்தப்பட்டவர்களை விளிக்கும் பதாகைகள் கொழும்பில் நேற்று முன்தினம் கேள்வி கேட்டன. ஆம், கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த, மூவினங்களையும் சேர்ந்த, மாணவர்கள் எழுப்பிய கேள்வி இது.

வன்னிக்கான பாதையைத் தாமதமின்றித் திறக்கக் கோரியும், வன்னி மாணவர்கள் ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்கு தோற்றத் தேவையான வசதிகளைச் செய்யுமாறு கோரியும் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய பேரணியின் போது கேட்கப்பட்ட இந்தக் கேள்வி அர்த்தபுஷ்டியானது.

வன்னிப் பாதை மூடப்பட்டு முப்பத்தாறு நாள்களாகின்றன. அதனைத் திறக்கவேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்தி வடக்கில், கிழக்கில், மேற்கில் என்று மூன்று திசைகளில் இருந்து மக்கள் குரல் ஒலித்துள்ளது. மக்களின்உயிர்களோடுதொடர்புடைய இந்த விடயம் மனித நேயம் சிறிதளவும் இன்றி மனித உணர்வு சொற்பமும் இன்றிப் போட்டடிக்கப்படுகிறது.

வன்னிப் பாதை திறக்கப் படாததால் உயிராபத்தை எதிர் நோக்கி உள்ளவர்கள் இந்த நாட்டின் குடிமக்கள் என்று கருதி ஈவிரக்கமோ, கருணையோ காட்டாது அரசாங்கம் மெத்தனமாக நடந்து கொள்கிறது. மூன்று திசைகளில் இருந்தும் மக்களின் குரல் எழுந்த போதும் அரசாங்கத் தலைவர்கள் காது கேளாதவர்களாக செயற்படுகிறார்கள்.

வன்னிக்குப் போய்வரப் பயன்படுத்தப்பட்டு வந்த பாப்பாமோட்டைப் பாதையை ஜூன் மாதம் 26 ஆம் திகதி மூடியது அரசாங்கத் தரப்பே. ஆகையால் அதற்குப்பதிலாக புதிய பாதையைத்திறக்க வேண்டியபொறுப்பும் அதனுடையதே. அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு விடுதலைப் புலிகளும் இணங்கக்கூடிய ஒரு பாதையைத் திறப்பதற்கான முன் முயற்சியும் அக்கறையும் மனித நேயமும் அரசிடம் காணப்படவில்லை.

இரு தரப்புகளும் இணங்கக் கூடிய ஒரு பாதையைத் தெரிவு செய்து, இராணுவ நலன்களை முன்னிறுத்தாது, மக்களைப் பட்டினியிலிருந்தும், சாவிலிருந்தும் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறையுடன், கருணையுடன் இவ்விவகாரத்தை அணுகியிருந்தால்நிலைமை இந்தளவு மோசமடைந்திருக்காது.

இதுவிடயத்தில் ''தலையிட்டு'' இரு தரப்பையும் இணங்கச் செய்வதற்கான பணியைச் செய்ய வல்லமையுடைய சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் வெறும் பார்வையாளராக இருந்து கொண்டு, அவர்கள் தமக்குள்ளே தீர்க்கட்டும் — இணங்கட்டும் — என்ற போக்கைக் கடைப்பிடிப்பது மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

அரசாங்கத்துக்கு அதிபாரத்துடன் நெருக்குதலைக் கொடுக்கும் வலிமை உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ ஜனாதிபதிக்கு ''பாக்ஸ்'' அனுப்பியதோடு அயர்ந்து விட்டார்கள். அதன் பின்னர் காத்திரமான செயற்பாடுகளில் ஈடுபட்டதாக இதனை எழுதும் வரை தகவல் இல்லை.

இனிமேல் மக்கள் சக்தி திரண்டு அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் அன்றி, வன்னி மக்களுக்கு உதவுவதற்கு வேறு எவரும் இல்லை, கடவுளைத் தவிர. வன்னி மக்களின் வேதனையும் வெதும்பலும் இப்போதில்லாதுவிடினும், என்றோ ஒரு நாள் மனித நேயம் இல்லாதவர்களைச் சுடும்.

# புனர்வாழ்வு பெற்ற இளைஞருக்கு தொழில் முயற்சிகளில் உதவத்திட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 1

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அண்மையில் யாழ். செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டோர் சங்கத்தைக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றி சங்கத்திலுள்ள இளைஞர்களுக்கான சுயதொழில் முயற்சிக்கான உதவிகளை வழங்குவதென யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் இது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாகாண முகாமையாளர் வி. பாலசுப்பிரமணியம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன், கைத்தொழில் அபிவிருத்திச்சபை விரிவாக்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்களுக்குக் கடனுதவி வழங்கும் பொருட்டு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் — மேலும் தையல் மற்றும் தொழில் முயற்சிகளுக்கு இச் சங்க அங்கத்தவர்களுக்கு யாழ். செயலகம் உதவும் என்றும்—

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் இச் சங்கத்தைப் பதிவு செய்து தொடர்ந்து திட்டங்களைச் செயற்படுத்துவதெனவும் —

இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ 5-ரி)

## வன்னி மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 1

யாழ். பல்கலைக் கழக வன்னி மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள வன்னிப் பகுதி நிலைவரங்கள் குறித்து ஆராய்வதற்கான அவசர கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முல்லைத் தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்துப்பீட மாணவர்களையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## ஈ. சீ ஜி. மருத்துவ சேவை மந்திகையில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 1

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உள்ள ஈ. சீ. ஜி. [E. C. G.] இயந்திரம் பழுதடைந்ததால் இச் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் அண்மையில் மேற்படி வைத்தியசாலைக்குப் புதிதாக ஈ. சீ. ஜி. இயந்திரம்ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

அண்மையில் புதிதாக ஈ. சீ. ஜி. தொழிநுட்பவியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருந்தார். இவர் தவிர ஈ. சீ. ஜி. [E. C. G.] தொழிநுட்பவியலாளர் ஒருவரும் இங்கு பணிபுரிகின்றார்.

தொழிநுட்பவியலாளர்கள் இருவர் இருந்தும் இயந்திரம் பழுதடைந்ததால் தாம் ஈ. சீ. ஜிஎடுப்பதற்காக பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கே செல்ல வேண்டியிருப்பதாகவும்—

இரண்டு மாதங்களாக இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும்—

நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். [ஐ]

## எழுதுநர்கள் நியமனம்

வலி. தென்மேற்கு, ஒக 1

வலி தென்மேற்கு [மானிப்பாய்] பிரதேச சபைக்கு 10 எழுதுநர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு:-

செ. பிரதீபா, சி பாமினி, பொ.சிவசக்தி, நி.மோகனா, ச ஆ. சங்கரி, த சூரிய குமாரி, செ. மந்தாகினி, ம. அபிராமி, வி. திருவருட் செல்வி.

[ஐ-185]

## கைத்தொழில் அபிவிருத்திச்சபை தொழில் பயிற்சித் திட்டங்கள்

### செப்ரெம்பரில் இங்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 1

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நடத்தப்படும் தொழிற்றிறன் பயிற்சித் திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக யாழ். மாவட்டத்திலுள்ள பத்து பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 700 இளைஞர், யுவதிகளுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

உணவு பதனிடுதல், பழம் பதனிடுதல், பேக்கரிபொருள் உற்பத்தி, மெழுகு திரி, கற்பூரம் உற்பத்தி, தையல் வடிவமைப்பு, ஸ்கிறீன் பிரின்டிங் போன்றவை உட்பட 32 துறைகளில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட தொழிற்றுறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் மூலம் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பயிற்சிகளை வழங்குவதற்கென கொழும்பிலிருந்து தொழிற்றுறை நிபுணர்கள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

அத்துடன் இந்தப் பயிற்சிக்கென கொழும்பிலிருந்து தொழில் உபகரணங்களும் மற்றும் மூலப்பொருள்களும் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஐ-5-ரி]

## கடற்றொழில் கற்கைநெறி விரிவுரை

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள 'கடற்றொழில் டிப்ளோமா'க் கற்கை நெறிக்கான ஆரம்ப விரிவுரைகள் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவிருப்பதாக பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் கா. சித்திரவடிவேலு அறிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தரும் விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் விரிவுரைகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார் எனவும் —

மேற்படி கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் நாளை காலை 9 மணிக்கு பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-7-5)

# சிறுவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி நற்செய்திக்கு அர்த்தம் கொடுங்கள்

''சின்னஞ்சிறுவரை என்னிடம் வரவிடுங்கள்''

''சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு ஆறுதல் அளிப்பேன்''

''சின்னஞ்சிறிய ஒருவருக்கு நீங்கள் இவற்றை செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்''

அன்பின் அழைப்பு, அன்புறவின் அரவணைப்பு, நம்பிக்கையூட்டும் நல்வார்த்தை உறவுக்கு அடித்தளமான உறவாடல் இவற்றுக்காக ஏங்கித் தவிக்கும் மனங்கள் எம் எதிரே, எம்மோடு, எம் மண்ணில் பயணிக்கிறது.

இவர்களைக் கண்டும் காணாதவராய் மன இறுக்கத்துடன் மனிதத்தின் மாண்பை மதிக்காதவராய் தவறுகளை உணர்ந்து திருந்த முனையாதவராய் நாம் கழித்த நாள்களைச் சிந்திக்க சில வரிகள் நற்செய்தியில்

**ஞாயிறு நற்பிரசாதம்**

இருந்து மேலே தரப்பட்டுள்ளது.

சிந்தனைக்கு நல் விருந்தை சுவைப்பதில் மட்டும் சில சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்கிறோம். வார்த்தையினை வாழ்வியலுடன் தொடர்புபடுத்தி வாழ்வோரையே இன்றைய சமூகம் எதிர்பார்க்கிறது.

அடுக்கு மொழிகளும் அலங்கார வார்த்தைகளும் அல்ல அன்புறவில் நம்பிக்கையும், அரவணைப்பும் வேண்டி தேடியலையும் சின்னஞ் சிறுவர்கள் எம்முன்னே பல கோலங்களில் ஏங்கித் தவிக்கின்றனர். இவர்களின் பட்டியல் குடும்ப உறுப்பினராகவும் அயல் உறவினராகவும், அகதி அனாதைகள் என்ற உருவிலும் நீண்டு செல்கிறதே தவிர அவ்விதயங்களின் அழுகுரல் ஓயவில்லை. அன்புத் தேடல் பூர்த்திசெய்யப்படவில்லை.

வெளித்தோற்றத்தை அழகுபடுத்த முனைந்த போதும் உள்ளத்தின் காயங்கள் தீரவில்லை. அதனால் ஊமைகளாய்வாழ்கிறார்கள். நம்பிக்கையூட்டும் அன்பினைத்தேடும் அரவணைப்பின் ஏக்கத்தோடு உள்ள ஒருவருக்கு மற்றவர் அன்புக்கரம் நீட்டினாலே இம் மண்ணில் அழுகுரல் ஒழியும். அன்புச் சமூகம் மலரும்.

பயம், பதற்றம், பட்டினி மட்டுமல்ல எந்த வேளையும் அர்த்தம்புரியாத தண்டனைகள் தற்பெருமைகளுக்காக சிறுவர்களைப் பயன்கொள்ளவும் பாடசாலை முதல் வீடுகள் வரை பெரியோர்களைத் திருப்திப்படுத்தவும் போராட்ட கருவியாகுவதிலும் சிறுவர்களே பயன்படுத்தப்படுவதும் தாக்கத்துடன் வாழும் சின்னஞ் சிறுவர்களுக்கு கொடுக்கப்படும் அழுத்தமாகிறது அல்லவா? ஏங்கும் இந்த இதயங்களைத் தாங்கும் பொறுப்பு எம்முடையதென்பதை உணர்வோமா7

இறை வார்த்தைக்கொப்ப சுமை சுமந்து சோர்ந்திருப்போருக்கு ஆறுதல் கொடுத்து அரவணைத்து நம்பிக்கையை ஊட்டவேண்டிய பொறுப்பு பெற்றோர், பெரியோர்களிடமே உண்டு.இதனை ஏற்று எம் செயலில் மாற்றம் கொண்டாலே எதிர்காலச் சந்ததியின் நல் வாழ்வுக்கு வழிகாட்ட நற்செய்திக்கு அர்த்தமூட்டி வாழவைக்க முடியும்.

**யோசப் பாலா**

குடும்ப உறவுகளில் சிறுவர்களுடன் கலந்துபேசி அன்பினைப் பகிரும் சந்தர்ப்பங்கள் அருகிவருவதும் அமைதிக் குலைவுக்கு காரணமாகிறது. சிறுவர்களின் ஏக்கங்களையும் உணர்வுகளையும் தேவைகளையும் நம்பிக்கையுடன் பகிர்ந்துகொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்கவே எமது முன்னோர் வீட்டில் குடும்பமான வழிபாடு குடும்பமான ஆலயத் தரிசிப்பு குடும்பமான உறவினர் சந்திப்பு, சுற்றுலாக்கள் என ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இன்றையசிறுவர்கள் தமது வாழ்வில் பல தடைகளை எதிர்கொள்ளும் வேளை இறைவார்த்தைக்கு ஏற்ப அன்பு, அரவணைப்பு, நம்பிக்கையூட்டும் உறவாடல் மூலம் இறைவார்த்தையின் அர்த்தங்களுக்கு சாட்சியாய் வாழும் வாழ்வாலே சின்னஞ் சிறியோர் வாழ்வுக்கு இறை நம்பிக்கையூட்டும் செயல்களில் ஈடுபடுவோம். ★

## நாளை

ஆடி 17

திங்கட்கிழமை

திதி: பஞ்சமி

பிற்பகல் 2.44 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

பிற்பகல் 4.47 வரை.

சுபநேரம்: 12.03—1.33

ராகுகாலம்: 7.33—9.03

(பகலுக்கும் [illegible] பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தூய்மையான இதயம் இல்லாத எந்த மனிதனும் இறைவனை [illegible] நெருங்க முடியாது.

—அண்ணல் காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் ஆயுதமாகத் தரைப்பாதை விவகாரம்

# பேரிடரில் சிக்கியுள்ள வன்னி வாழ் மக்கள்

வவுனியா வலம்
-ரா.இளவரசன்-

வன்னிக்கும் — ஏனைய பகுதிகளுக்குமிடையிலான போக்குவரத்து தடைப்பட்டு கடந்த திங்கட்கிழமையுடன் ஒரு மாதம் கடந்துவிட்டது. இதற்கு முன்னரும் அவ்வப்போது பாதை தடைப்பட்டது தான். ஒருவாரம், இருவாரங்கள் தடைப்படும்; பின்னர் சரிவரும். அது சாதாரணமானது. முல்லைத்தீவு முகாம் தாக்கி அழிக்கப்பட்டபோது இதேபோல் நீண்ட நாள்கள் போக்குவரத்துத் தடை ஏற்பட்டது. ஆனால் அப்போது இராணுவம் மக்களை வரவேற்கத் தயாராக இருந்தது. ஆனால் மக்கள் தான்போகப் பயந்தபடி இருந்தனர்.

இப்போது நிலைமை அப்படியல்ல. பாதையுமில்லை; பாதை திறப்பதற்கான சாத்தியக் கூறுமில்லை. அங்குள்ள மக்களுக்கு உண்ண உணவில்லை; நோயாளருக்கு மருந்தில்லை; வீட்டிலே எரிக்க எண்ணெய் கூட இல்லாத நிலை. இந்த நிலையில் நாளை 2 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைகூட நடக்குமோ, நடக்காதோ என்று தெரியாத நிலை.

இந்த நிலையில் அங்கேயுள்ள மக்கள் அடுத்த கட்டம் என்ன ன்று தெரியாத நிலையில் தவித்துப் போயிருக்கிறார்கள். வன்னியைப் பொறுத்தவரை அதன் மொத்த சனத்தொகை 3 லட்சத்து 76 ஆயிரத்து 365பேர் என்று செயலகக் கணிப்பீடுகளிலிருந்து தெரிய வருகிறது. இதில் 2 லட்சத்து 97 ஆயிரத்து 792 பேர் இடம் பெயர்ந்தவர்கள். இவர்களில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 18 பேர் கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கிறார்கள். அதில் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 433பேர் இடம் பெயர்ந்தோர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 879 பேர் இருக்கிறார்கள் அதில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 768 பேர் இடம் பெயர்ந்தோர்.

மன்னார் மாவட்டத்தில் 32 ஆயிரத்து 468 பேர் வசித்து வருகிறார்கள். அதில் 24ஆயிரத்து 596 பேர் இடம்பெயர்ந்தோர்.

இவர்களது உணவுத் தேவைகளுக்காக மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் நிவாரணப் பொருள்கள் அறுநூறு லொறி லோட்டுகளில் சென்றிருக்க வேண்டும், ஆனால் இதுவரை 242 லொறி லோட் உணவே சென்றிருக்கின்றது. இதே வேளை கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைக்காக ஆயிரத்து 94 லொறி லோட்களில் பொருள்களை எடுத்துச் சென்றிருக்க வேண்டும். ஆனால் இதுவரை 176லோட் பொருள்களே சென்றிருக்கின்றன. இந்த நிலையில் — பயணிகள் போக்குவரத்தும் தடைப்பட்ட நிலையில் — வியாபாரிகள் அன்றாடம் எடுத்துச் செல்லும் பொருள் விநியோகமும் தடைப்பட்டுவிட்டன. இதனால் வன்னி வாழ் மக்களின் உணவுத் தேவை படுபாதகமடைந்துள்ளது. சீனி, கால் கிலோவிற்கு மேல் எவருக்கும் வழங்கப்படமாட்டாது அதுவும் விலை 25 ரூபா ஆகிறது.

மண்எண்ணெய் 150 ரூபாவிலிருந்து ஏறிக் கொண்டே போகிறது. வன்னி என்னவோ விவசாயப் பூமியாக இருப்பதால் நெல்லுக்கும் அரிசிக்கும் தட்டுப்பாடில்லையாயினும் ஏனைய பொருள்கள் இல்லாமல் அரிசி மட்டும் வைத்திருந்து ஆகப்போவது எதுவுமில்லைத் தானே?

அடுத்து மருந்துநிலை. பாதை தடைப்படுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் தான் வன்னிப்பகுதியின் மருத்துவத்துக்குத் தேவையான இரண்டாம் காலாண்டு மருந்துகள் எடுத்துச் செல்லப்பட்டன. அதனால் மருந்துத் தட்டுப்பாடு பாரதூரமாக இல்லை. ஆனால் அவசர மற்றும் மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவிற்கும் அநுராதபுரம், கொழும்பு ஆகிய வைத்தியசாலைகளுக்கும் அனுப்பப்பட முடியாதவர்கள் நாளாந்தம் செத்துக் கொண்டே போவது தான் மகா கொடுமை. இதுவரையில் இவ்வாறு ஐந்துக்கும் மேற்பட்டோர் இறந்து விட்டனர். 40ற்கும் மேற்பட்டோர் மல்லாவி, அக்கராயன், புதுக்குடியிருப்பு வைத்தியசாலைகளில் பாதை திறந்தால் காப்பாற்றப்படவும். திறக்காவிட்டால் பரலோகம் போகவும் காத்திருக்கிறார்கள். மருந்து கையிருப்பிலிருக்கிறது தான் ஆனால் அவைகளைக் களஞ்சியப்படுத்த குளிரூட்டிகள் இயங்க வேண்டும். அதற்கும் மற்றும் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளவும் ஜெனரேட்டர்கள் இயங்க வேண்டுமே அதற்கு எரிபொருள் தேவை. கையிருப்பில் இருந்த எரிபொருள்கள் தீர்ந்துபோன நிலையில் வைத்தியசாலைகள் இயங்க முடியாமல் போக வேண்டியுள்ளது.

அடுத்து நாளை 2 ஆம் திகதி ஆரம்பிக்கப் போகும் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடக்குமா நடக்காதா என்ற நிலை. 3 வருடங்களாக விழுந்து விழுநது குப்பி விளக்குகளில் படித்த மாணவர்களுக்கு இது விரக்தியை ஏற்படுத்தி விட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் 1090 பேரும் —

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,399 பேரும் —

வவுனியா வடக்கில் 100 பேரும் —

மன்னாரில் 30 பேரும் —

பரீட்சைக்குத் தோற்ற உள்ள நிலையில் இந்தக் கட்டுரைஎழுதப்படும் வரை அனுமதி அட்டைகளும், காகிதாதிகளும் வன்னிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை. இதே வேளை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, மற்றும் கடந்த 4 வருடங்களாக நடத்தப்படாத அதிபர் போட்டிப்பரீட்சை என்பனவும் நடைபெறுமா? என்ற நிலை தோன்றியுள்ளது. இந்தப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டை முதல் - வினாத்தாள்கள்வரை அனைத்துப் பொருள்களையும் மன்னாரிலிருந்து - வன்னியில் மூன்றாம் பட்டிவரை படகுமூலம் கடல்வழியாக எடுத்துச்செல்வது எனத் திட்டமிடப்பட்டதாயினும் அதற்குச் சாதகமானநிலை ஏற்படவில்லை.

இந்தப்பரீட்சை[illegible]களை எடுத்துச் சென்று வன்னியில் வழங்க அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இணங்கியிருந்தது. அதன்படி வவுனியாவிலிருந்து அந்த நிறுவனப்பிரதிநிதிகள் வள்ளங்களில் வினாத்தாள்களை எடுத்துச் சென்று மூன்றாம் பிட்டியில் கொடுக்க — வன்னிப் பிரதிநிதிகள் பொறுப்பேற்று உரியவர்களிடம் கையளிப்பதுஎன்பதுதான் திட்டம். ஆனால் மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகிய நிறுவனங்களின் அலுவலகங்கள் முன்பாக மக்கள் மறியற் போராட்டத்தை கடந்த 19ஆம் திகதியிலிருந்து நடத்துகிறார்கள் இரவு, பகலாக நடைபெறும் இந்த மறியல் போராட்டத்தினால் அந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் அலுவலகத்தை விட்டு வெளியே வரமுடியாத நிலை. இந்த நிலையில் யார் மூன்றாம் பிட்டிக்குவந்து பொருள்களைக் கையேற்பது என்ற நிலையில் வன்னியிலுள்ள கல்வித்திணைக்கள அதிகாரிகள் கடல்மூலம் பொருள்களை ஏற்க முடியாதெனக் கையை விரித்துவிட்டார்கள். தரைப்பாதையால் அனுமதி அட்டைகள் காகிதாதிகள், வினாத்தாள்களை அனுப்புங்கள் என்று கடிதம் ஒன்றை வவுனியா அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அரசாங்க அதிகாரிகள், அலுவலர்கள், வைத்தியர்கள் மற்றும் சகல அரச ஊழியர்களுக்கு சம்பளம் இதுவவர வழங்கப்படவில்லை. அதற்கான கட்டுநிதி இன்னமும் போய்ச் சேரவில்லையாம்.

வவுனியாவிலிருந்து வன்னிக்கு அனுப்பப்படாமல் தபால் பொதிகள் நூற்றுக் கணக்கில் வவுனியா தபால் நிலையத்தில் தேங்கிக்கிடக்கின்றன. அதேபோல் தென்பகுதிக்கு எடுத்து வரப்பாதையில்லாமல் நூற்றுக்கணக்கான தபால் பொதிகள் வன்னிப் பகுதியிலுள்ள தபால் நிலையங்களில் தேங்கிப் போயுள்ளன. இவ்வாறாக வன்னிப் பிரதேசம் எல்லாப் பக்கத்தாலும் பாதிக்கப்பட்டுப்போயுள்ளது.

மல்லாவியில் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின் முன்னால் கடந்த 10 நாள்களுக்கு மேலாக மறியல் போராட்டம் தொடர்கிறது. அதனால் அந்த நிறுவனப் பிரதிநிதிகள் வெளியே செல்ல முடியாதநிலை. அந்தப் பிரதிநிதிகள் பல தடவை வெளியேறப் போராட்டக் காரர்களிடம் அனுமதி கோரிய போதும் அவர்கள் மறுத்து விட்டனர். கடந்த வாரத்தில் வன்னியிலுள்ள செய்தியாளர்கள் இந்த வதிவிடப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச அனுமதிக்கப்பட்டனர். அப்போது தங்களது இயலாமையைத் தெரிவித்த அந்தப் பிரதிநிதிகள் போராட்டக்காரர்கள் தரும் மகஜர்களைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பதைத் தவிர ஏனைய எந்த முயற்சிகளும் நம்மால் மேற்கொள்ள முடியாதுள்ளதெனத் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் உணவுப் பொருள்களை ஏற்றி இறக்கும் நூற்றுக் கணக்கான லொறிகளை வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்கள் முன்பாக நிறுத்திவிட்டு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கானவர்கள் தொடர் மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வன்னியின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் சைக்கிள்களிலும், வாகனங்களிலும் ஊர்வலமாக வந்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இதனால் இந்த நிறுவனங்கள் செயலிழந்து போயுள்ளன. அதே வேளை வன்னியிலுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி செயலகங்கள் முன்பாகவும் மக்களின் மறியல் தொடர்கிறது. இதனால் அவையும் செயற்படவில்லை. அதே வேளை புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, துணுக்காய் ஆகிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை வவுனியாவிலிருந்து ஏற்றிக் கொண்டு 29 பஸ்களில் சென்ற இராணுவத்தினர் எந்தவிதமுன்னறிவிப்புமின்றி மூன்றுமுறிப்பு ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு — பனங்காமத்திற்கு — மக்களை அனுப்ப முயற்சித்துள்ளனர்.

இராணுவத்தினரின் வோக்கிடோக்கிமூலம் பயணிகள் புலிகளுடன் கதைத்த போது புலிகள் நிலைமையின் விபரீதத்தை விளக்கியிருந்தனர். ஆயினும் அதனையும் மீறி மக்கள் தங்கள் பகுதிக்கு வரமுற்பட்ட போதே புலிகள் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு அவர்களைத் துரத்த வேண்டி ஏற்பட்டதாம். அதன் பின்னர் பயணத்தைத் தொடர முடியாது மக்கள் திரும்பிவரும் போது மூன்றுமுறிப்பு பகுதியில் ஆயிரக்கணக்கில் இராணுவத்தினர் சாக்குகள், மண்வெட்டிகள், பிக்கான்களுடன் நின்றதாகவும் அதற்குப் பின்னர் தான் இராணுவம் தங்களைப் பணயமாக வைத்து முன்னேற முயன்ற விடயம் தமக்குத் தெரியவந்ததாகவும் வவுனியா திரும்பிய மக்கள் தெரிவித்துள்ளனர். ★

## சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பமலர்

# 'இன்ரநெற்' இணைப்பில் யாழ். மத்திய கல்லூரி

க. இராசதுரை
அதிபர்,
யாழ். மத்திய கல்லூரி

183 வருடம் நிறைவுற்று இன்று 184 ஆம் ஆண்டில் காலடி வைக்கும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி தனக்கே உரித்தான பதின்மரைஇன்று நினைவு கூருகின்றது.

1816- 08- 01 இல் எமது கல்லூரியை ஆரம்பித்த ஜேம்ஸ்லிஞ்ச், மத்திய பாடசாலையாகத் தரமுயர்த்திய பீற்றர்பேர்சிவல், பழைய மாணவரும் ஆசிரியருமான சைவத்தமிழறிஞர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், துடுப்பாட்டத்தை யாழ்ப்பாணத்துக்கு எமது கல்லூரியூடாக அறிமுகப்படுத்திய அதிபர் பிரட்றிக் வெப்ஸ்ரர், அதேபோல் உதைபந்தாட்டத்தை அறிமுகப்படுத்தியஅதிபர் கேப்ரியல் லீஸ், உலகத்திருச்சபையின் உன்னத இடத்தை வகித்த முதல்தமிழர் - எமது பழைய மாணவர்- ஆசிரியர் - அதிபர்- வண. கலாநிதி டீ. ரீ. நைல்ஸ், நாட்டின் ஆசிரியர் தொழில் உயர்ச்சி பெற தொழிற்சங்கரீதியில் உழைத்த எமது பழைய மாணவர்- ஆசிரியர்- அதிபர் [illegible] கல்வியை எமது கல்லூரியூடாக ஆரம்பித்த முன்னோடியும்- எமது பழைய மாணவரும், ஆசிரியருமான கலைப்புலவர் க. நவரத்தினம், யாழ்ப்பாணத்தில் ஷேக்ஸ்பியர் நாடக அரங்கின் வல்லுநராகத் திகழ்ந்த எமது பழைய மாணவர்- ஆசிரியர் -உபஅதிபர் பதிலதிபர் ஜே. சி. சாள்ஸ், ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாகப் பங்குபற்றிய ஒரேஒரு தமிழ் மாணவன்- எமது கல்லூரி மாணவர்என். எதிர்வீரசிங்கம் என்போரே அவர்களாவர்.

எமது கல்லூரியைத் தேசியக் கல்லூரியாகத் தரமுயர்த்த உழைத்த நா. க. சண்முகநாதபிள்ளை அதற்கான முக்கிய ஏற்பாடுகளைப் புரிந்த திரு. கே. தயாபரன் வைத்திய சேவையை — சமூக சேவையாகவும் எம்முடனே நின்று புரியும் — வைத்திய கலாநிதி குகதாசன் என்போரையும் கல்லூரி என்றும் நினைவில் கொள்ளும்.

இக்கல்லூரி இன்று இப்புதுவயதில் ஆரம்பித்திருக்கும் —

★ மகேஸ்வரி — கணனிப் பயிற்சி நிலையம் [30 கணனிகளுடன் இயங்கவுள்ளது]

★ கணனி தொலைத் தொடர்பு வலைப் பின்னல் சேவை[WWW. Jaffna Central. Com]

★ மின் அஞ்சல் சேவை [ஈ-மெயில்] [Principal@Jaffna-Central.Com]

என்பனவும் — நவீன கல்வியுடன்நவீன தொலைத்தொடர்புச் சேவையும் இணையும் வாய்ப்பையும் பெற்றுள்ளது.

கடந்த வருடம் அகில இலங்கை ரீதியில் வணிகக் கல்வியில் இரண்டாம், எட்டாம் இடங்களைப் பெற்ற எமது கல்லூரி முன்பு கணித- பொறியியல், வைத்தியத் துறையில் முதலிடம் வகித்தது போன்று எதிர்காலத்திலும் மிளிர ஆசிரியர்கள் மாணவர்கள் கடினமாக உழைக்கின்றனர்.

ஒழுக்கக் -கல்வியையும் விளையாட்டு விருத்தியையும் முக்கிய ஆளுமைப் பண்புகளாகவும் சமூக சேவையையும் மத வணக்கத்தையும் ஆத்மீகப் பண்புகளாகவும் மாணவர்களிடம் வளர்த்து வரும் எமது கல்லூரி தனது முன்னைய மிடுக்குடன் மீண்டும் வெற்றி நடைபோடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவுக்குள் நுழைந்துள்ள யாழ்ப்பாணம்; பல சுதந்திரங்களை அனுபவிக்க சம உரிமை

பல இன மக்கள் வாழும் ஒரு நாட்டிற்குச் சமஷ்டி அரசியலமைப்பே மிகச் சிறந்தது என்பது ஈழத்துக்காந்தி தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களது அரசியற்

**ஈழத் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் வெளிநாடு கனடா. அந்த நாட்டுக்குச் சென்ற மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான செல்லப்பா நடராசா அங்கு வாழும் யாழ்ப்பாணத் தமிழர்களையும் அவர் தம் வாழ்க்கையையும் நுணுக்கமாக அவதானித்து உதயனுக்கென விசேடமாக எழுதியுள்ளார்.**

**அங்கு குடியேறியவர்களின் உணர்வுகளையும் விருப்பங்களையும் கட்டுரையாளர் தமது எழுத்தினூடாக யாழ்ப்பாண வாசகர்களுக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.**

சிந்தாந்தமாகும். அத்தகைய ஓர் அரசியலமைப்புத்தான் இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கும் சிறந்ததென அவர் நீண்டகாலமாகவே வாதாடி வந்தார். இதற்கு முன்மாதிரியாக அவர் கனடாவை உதாரணம் காட்டியதுண்டு.

ஆனால் இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர், தாம் கனடா நாட்டுக்குள்ளேயே பெரும் எடுப்பில் அகதிகளாகப் புகும் நிலை வரும் என்று கனவிலும் கருதியிருந்திருக்கமாட்டார்கள். மூன்றுகோடி சனத்தொகையையுடைய கனடாவில் இன்று ஒன்றரை இலட்சம் ஈழத்தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இந்த எண்ணிக்கை மிக விரைவில் இரண்டு இலட்சத்தைத் தொட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகில் இலங்கைக்குவெளியே இலங்கைத் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் நாடு கனடா என்பது வரலாறாகி வருகிறது.

இலங்கைத் தமிழ் மக்கள் 1983 ஆம் ஆண்டிற்குப் பின்னரே பெரும் அளவில் கனடாவைத் தஞ்சம் அடைய

**சிறப்புக் கட்டுரை**

ஆரம்பித்தனர். இதற்கு அந்த நாட்டின் மனிதநேயப் பண்பே காரணம். எந்த நாட்டு மக்களாயினுஞ்சரி தமது நாட்டில் வாழவழியின்றித் தவித்துப்போன அகதிகளுக்கோ அல்லது அடித்து விரட்டப்படுபவர்களுக்கோ அன்புக்கரம் நீட்டும் நாடுகளின் வரிசையில் முதலிடம் வகிக்கும் கனடாவை ஒரு புண்ணிய பூமியாகவே நான் பார்க்கின்றேன்; பல விடயங்களில்.

## மொழி, சமயம், கலைகளை வளர்க்கத் துடிக்கும் உத்வேகம் பிரவாகிக்கிறது

கனடாவுக்கு நிகராக இன்னொரு நாட்டை ஒப்புவமை காண்பது மிக அரிதாகின்றது. மகிமைகள் மிக்க இந்நாட்டில் சுமார் இருநூறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு இனமொழி பேசும் மக்கள்வாழ்கிறார்கள். ரொறன்ரோ நகரில் மட்டும் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட இன மக்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகின் பல்வேறு வகையான கலை கலாசாரங்களையும் பண்பாடுகளையும் நடையுடைகளையும் ஒரேஇடத்தில் காணவேண்டும் என்றால் அது ரொறன்ரோ மாநகரத்தில் மட்டும் தான் சாத்தியமாகும்.

### சம உரிமை

கனடாவைத் தமது வாழ்விடமாகக் கொண்டுள்ள அனைத்து மக்களும் மொழி, மத, கல்வி, பொருளாதார சுதந்திரங்களைச் சமமாக அனுபவிக்கும் உரிமைகளை உடையவர்கள். இங்குள்ள தமிழ் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரங்களுக்கோ சிறிய உதாரணமாக ரொறன்ரோவிலும் மொன்றியலிலும் நிறுவப்பட்டுள்ள திருக்கோயில்களைக் குறிப்பிடலாம். ரொறன்ரோவில் ஒன்றேகால் இலட்சம்,

**செல்லப்பா நடராசா**

மொன்றியலில் இருபதினாயிரம் என்ற கணக்கில் தமிழ் மக்கள் உள்ளனர். இதுவரை பத்துக்கு மேற்பட்ட கோயில்கள் நிறுவப்பட்டு அவை சிறப்பாக இயங்கியும் வருகின்றன. இந்த வரிசையில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் அடியார்கள் கனடாவில் ''நயினாதீவு நாகபூஷணி அம்மன்'' கோயிலொன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளதுடன் இதன்பொருட்டு விக்கிரகங்களைத் தமிழகத்திலிருந்து தருவித்தும் விட்டனர். மத சுதந்திரம் இவ்வாறு இங்கு போற்றப்படுகின்றது.

### திருவிழாக்கள்

ரொறன்ரோ றிச்மண்ட் ஹில் பிள்ளையார் கோயிலில் அண்மையில் நடைபெற்று முடிந்த முருகன் வருடாந்த தேர்த் திருவிழாவின்று பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்குபற்றியிருக்கிறார்கள். அடியார்களுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. மொன்றியல் துர்க்கை அம்மன் வருடாந்த உற்சவமும் வெகு விமரிசையாகப் பூர்த்தியாகியுள்ளது. மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கோயிற் கொடியேற்றம் ஆவணியில் நடைபெறுவது வழக்கம். இக்கோயிற் திருவிழாக்களைக் கண்டு களிக்கவெனக் கனடாவின் பல

[8 ஆம் பக்கம் பார்க்க]

**சூரியகாந்தி**

**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

# உயிரினங்களின் அழிவு அதிகரிப்பது தவிர்க்க முடியாத இயற்கையின் நியதி

அடுத்த ஆண்டுக்குள் உலகம் அழிந்துவிடும் என்ற சோதிட ரீதியான கணிப்பு இப்போது பத்திரிகைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. பத்திரிகைகள் பலவாறாக விமர்சித்து வருகின்றன. இவை வாசகர்கள் மத்தியில் அச்சத்தையும் மனக் குழப்பங்களையும் உருவாக்கி வருகின்றது.

மேலெழுந்தவாரியாக அன்றி, இக் கணிப்புக்களை நுணுக்கமாக ஆராய்வது பயனுள்ளதாக இருக்கும். சில

**கு.சி. சுந்தரம்பிள்ளை**

நுட்பமான அறிவுறுத்தல்களையும் பெற முடியும்.

''உலகம்''—என்ற பதம் என்ன கருத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இங்கு முக்கியமானதாகும். தமிழில் இச்சொல் பல வகையாகப் பொருள்படும்.

சோதிட ரீதியாகப் பயன்படுத்தப்படும் சொற்கள் சாதாரண நிலையிலிருந்து வேறுபட்டு ஒரு குறிப்பிட்ட கருத்தையே வலியுறுத்துவனவாக அமைகின்றன. இந்த வகையில் 'உலகம்' என்ற சொற்பதம் உயிரினங்களையே சுட்டுகின்றன. உலகத்தில் வாழும் உயிரினங்கள் என்ற கருத்துடன் தான் இச் சொற்பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

'பூமி' என்ற பதம்தான் நாம் வாழும் இக் கோளத்தைச் சுட்டி நிற்கும். தமிழிலுள்ள பழைய செய்யுள்களை அவதானித்தால் இது புலனாகும். 'உலகம் ஆயிரம் சொல்லட்டுமே, உனக்கு நீதான் நீதிபதி'' என்ற அண்மைக் காலப் பாடல் வரி 'உலகம்' என்ற சொற்பதம் மக்களைச் சுட்டி நிற்பதைக் காணலாம்.

ஆகவே சோதிடர்களால் வெளியிடப்பட்டுள்ள கணிப்புக்களில் 'அவர்கள் கருதியது உலகில் வாழும் உயிரினங்களேயாகும். உயிர் இனங்களின் அழிவு இக் காலப் பகுதியில் அபரிமிதமாக இருக்கும் என்பதனையே சோதிடர்களின் கூற்றுகள் உணர்த்துகின்றன, இதே நேரத்தில் உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் அழிந்து விடும் என்று அர்த்தம் கொள்வது உகந்ததல்ல.

கடந்த சில ஆண்டுகளில் பூமியின் பல பாகங்களிலும் இயற்கையின் சீற்றத்தாலும் போர்களினாலும், வேறு வகையிலும் அவ்வப்போது பாரிய அளவில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுவருவதை அவதானிக்கலாம்.

பூமியில் உயிரினங்களின் எண்ணிக்கை அளவுக்கு மிஞ்சி அதிகரிக்கும் போது, இப்படியான அழிவுகள் ஏற்பட்டு அவை சமப்படுத்தப்படுவது காலத்திற்குக் காலம் பூமியில் ஏற்படும் நிகழ்வுகளாகும். அத்தகையன எப்போது ஏற்படும் என்பதனையே சோதிடக் கணிப்புகள் கூறுகின்றன.

**சோதிடப் பார்வையில்**

**உலக அழிவு**

### யுத்தகாரகனும் மோட்சகாரகனும்

மேடராசியின் அதிபதி செவ்வாய் என்னும் கிரகமாகும். செவ்வாய் சோதிட ஆய்வுகளில்யுத்தகாரகன்என வர்ணிக்கப்படுகிறது. போரை உருவாக்குவது தான் இதன் தொழில்.

சனி என்ற கிரகம் இவ்வாறே, மோட்சகாரகன்' என அழைக்கப்படுகிறது. அதாவது உயிரினங்களை, இவ்வுலக வாழ்விலிருந்து விடுவித்து மோட்சத்திற்கு அனுப்பும் தொழிலை இக்கிரகம் செய்கிறது.

செவ்வாய்க்குரிய மேட ராசியில் 'சனி' சஞ்சாரம் செய்யும் போது, செவ்வாயின் யுத்தத்தன்மை 'சனி'யைப் பற்றிக் கொள்ளும். ஆகவே யுத்தத்தை உருவாக்கி உயிரினங்களை அழித்து அவற்றை மோட்சத்திற்கு அனுப்பும் தொழிலை இக்கிரகம் இச் சஞ்சார காலத்தில் செய்யும்; சோதிடம் இதனையே கூறுகிறது. இந்த வகையில் 'சனி' மேட ராசியில் சஞ்சாரம் செய்யும் போது 'உலக யுத்தம்' உண்டாகும். முதலாவது, இரண்டாவது உலக மகாயுத்தங்கள் இப்படியான கிரக சேர்க்கைகளின்போதுதான் இடம்பெற்றன,

வியட்நாம் போர், இலங்கையில் 'சேகுவரா' இயக்கக் கிளர்ச்சி ஆகிய நிகழ்வுகளும் இப்படியான சேர்க்கைக் காலத்திலேயே இடம் பெற்றன.

இப்போது 'சனி' மேட ராசியில் சஞ்சாரம் செய்கிறது. ஆகவே உயிரழிவுகள் ஏற்

[11 ஆம் பக்கம் பார்க்க]

**எதிரொலி...**

**- இடியன் -**

- யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட பருப்பு, பழுதடைந்த காரணத்தால், கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது.

★ **வேறொரு பெயரில் அல்லது வேறொரு உருவில் அந்தப் பருப்பு இங்கே திரும்பவராது என்பது என்ன நிச்சயம்? என்கிறார் ஒரு பாவனையாளர்!**

- வடக்கு, கிழக்குப் பகுதிகளில் எத்தனையோ சாத்வீகப் போராட்டங்கள் நடந்தும்கூட, வன்னிக்கான பாதை இன்னமும் திறக்கப்படவில்லை!

★ **சம்பந்தப்பட்டவர்களின் உள்ளப்பாதை திறந்தால் மட்டுமே வன்னியில் உள்ள பாதைகளுள் ஒன்று திறக்கப்படுவது சாத்தியமாகும்!**

- எதிர்வரும் தேர்தலில், தன்னுடைய ஆதரவு எந்தக் கட்சிக்கும் இல்லை என்பதை ரஜனிகாந்த் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

★ **'காந்(த்)'தக் கவர்ச்சியை விட, கருத்துக் கவர்ச்சியே முக்கியம் என்பதைக் கட்சிகளுக்கு அவர் உணர்த்துகின்றாரோ?**

- தேர்தலில் தனக்கு வெற்றி நிச்சயம் என்கின்றார் அ. இ. அ. தி. மு. க. தலைவி செல்வி ஜெயலலிதா!

★ **வெற்றி நிச்சயம் எனச் சொன்னவர்கள், இங்கே வழி தெரியாமல் நிற்கும்போது, ஜெயலலிதா இப்படிச் சொல்கின்றாரே என்கிறார் அரசியல் அனுபவம்கொண்ட ஒருவர்!**

- பச்சிளம் குழந்தைகளைப் பொறுத்தவரை, வன்னியில் அங்கோலாவின் நிலை உருவாகிவிட்டதென்றே சொல்லலாம்!

★ **அங்கும் ஓலம்! இங்கும் ஓலம்! ஆனால் உரியவர்களின் காதில் விழும் 'காலம்' தான் இன்னமும் கனியவில்லை.**

- கார்கிலில் இந்தியப் படை நடவடிக்கை இன்னமும் ஓயவில்லை என்கிறார் படைத்தளபதி மாலிக்!

★ **அதாவது இராணுவ நடவடிக்கைகளில் பாக்கி (ஸ்தான்) இருக்கின்றது என்கின்றார்!**

- அதிபர் ஆட்சி முறையே இந்தியாவுக்கு ஏற்றது என்கின்றார் மத்திய வர்த்தக அமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே!

★ **ஜெயலலிதா, சுப்பிரமணிய சுவாமி போன்றவர்களின் தொடர்பு கற்றுக் கொடுத்த பாடமோ?**

- எங்களை மீறி உலக அரசியலில் எதுவும் நிகழாது என்கின்றது அமெரிக்கா; தவிர்க்க முடியாத சக்தியாக அது விளங்குவதாக அதன் வெளியுறவுத் துறை அமைச்சர் கூறுகின்றார்.

★ **உணவுக்கு உப்பு அத்தியாவசியந்தான்; ஆனால் அது இல்லாவிட்டாலுங்கூட ஓரளவு சமாளிக்கலாம்; அது அளவிற்கு மீறினால் உணவை வாயிலே வைக்கவும் முடியாதே என்ற உண்மையை அமெரிக்கா உணரும் நாள் எந்த நாளோ?**

- மோட்டார்சைக்கிளிற் செல்பவர்கள் 'ஹெல்மெற்' அணியக் கூடாதாம்!

★ **மீன்பிடிக்கச் செல்பவர்கள் சாரம் அணியக் கூடாது; மோட்டார் வாகனத்திற் செல்பவர்கள் ஹெல்மெற் அணியக் கூடாது; இப்படி ஒவ்வொன்றாகத் தடை செய்து மக்களை நிர்வாணமாக்கினால். 'நிவாரணம்' அளிக்கவேண்டிய தேவையே ஏற்படாது; எல்லோரும் வீட்டுக்குள்ளேயே முடங்கிவிடுவர்! அதற்காத்தானோ.........?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முகம்



சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த செல்லையா தவராசா யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி இ. த. விக்கின ராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சுதுமலை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுவில் மான்ஸ் வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரிகளில் கல்வி பயின்ற இவர் காந்திருபன் சனசமூக நிலையம், வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் ஆகிய பல அமைப்புகளிலும் முக்கிய பொறுப்புக்களில் பணியாற்றியுள்ளார். (ஐ–27)

★ ★ ★ ★ ★

யாழ், புனித மரியாள் வித்தியாலயத்தில் கடந்த 26 ஆண்டுகள் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய சி. தார்சீசியஸ் அண்மையில் அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக தற்போது சேவையாற்றி வருகின்றார். (ஐ–17)

★ ★ ★ ★ ★



அல்வாயைச் சேர்ந்த நடேசு துரைராஜா யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ. கே, நடராசா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை செயலகங்களில் எழுதுவினைஞராகக் கடமையாற்றி இளைப்பாறியுள்ள இவர் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி, கரவெட்டி, திரு இருதயக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற இவருக்கு அவ்வூர் மக்களால் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் முன்றலில் பாராட்டு விழா ஒன்று நடத்தப்பட்டது. (173)

★ ★ ★ ★ ★

தென்புலோலியைச் சேர்ந்த இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ. எஸ். ஏகாம்பரநாதன் நீதி அமைச்சினால் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ. கே. நடராசா முன்னிலையில் இவர் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பேராதனை இலங்கை பல்கலைக்கழக கலைப்பட்டதாரி (தமிழ் சிறப்பு) யான இவர் 1957 ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்று பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் அதிபராகவும், புலோலி கொத்தணி அதிபராகவும் வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்பட்டு பிரதிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றி இளைப்பாறினார்.

இவரது சிறந்த கல்விச் சேவை உயர் அதிகாரிகள் பலரினதும் பாராட்டுக்களைப் பெற்றதோடு கல்வி உலகில் நன்மதிப்புக்குரிய ஒருவராகவும் திகழ்ந்தார். சிறந்த சமய, சமூக சேவையாளரான இவர் வடமராட்சிப் பகுதியில் சிறந்த பௌராணிகரில் ஒருவராவார்.

தென்புலோலி உபயகதிர்காம முருகன் ஆலய உயர் சபை உறுப்பினராகவும் சின்னத்தாய் விநாயகர் ஆலய பரிபாலகராகவும் இருந்து வருகிறார். [ஐ–173]



Stop falling hair !
Vanish dandruff !!
Healthy hair thrughout your life.
ONLY ANSWER IS Kolin
Shampoo, Conditioner and Revitalizer
Check Manufacture and expire dates & this emblems on the cartoon
Available in Pharmacies and groceries Please ask your dealers
Tel.: 01-237072/3, 0722-42518, 0722-53028, 077-344148
(சி/8379)

# கனடாவுக்குள் நுழைந்துள்ள...

[7 ஆம் பக்கத் தொடர்]

பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வருவதுண்டு.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணக் கோயிற் திருவிழாக்களுக்குத் தமிழ்நாட்டிலிருந்து பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்கள் வரவழைக்கப்படுவதுபோன்று, கனடாவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்கள் அழைக்கப்பெறுவது இந்தக்கால வழக்கமாகி வருகின்றது. இந்தவருடம் கனடாவில் சிறப்புக் கச்சேரிகள் செய்வதற்கென யாழ்ப்பாணம் பிரபல நாதஸ்வர வித்துவான்களான வி. கே. பஞ்சமூர்த்தி, எம். பீ. பீ திவாகரன், புகழ்பூத்த தவில் வித்துவான்களான தெட்சணாமூர்த்தி உதயசங்கர், கே. நித்தியானந்தம் ஆகியோர் வந்துள்ளனர். இவர்களது கச்சேரிகளைஅனுபவிப்பதற்கென்றே மக்கள் பெருமளவில் திரள்கிறார்கள். யாழ்ப்பாணம் போல் வடக்கு வீதியிற் தவிற் சமா கனடாத் திருக்கோயில்களிலுமுண்டு. புலம்பெயர்ந்து வந்துள்ள நிலையிலும் கனடாவில் தமிழ் மக்கள் தமது சில பாரம்பரியங்களை பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் வைகாசி மாதத்தில் பல திருக்கோயில்களில் வருடாந்தப் பொங்கல் உற்சவங்கள் நடைபெறுவதைப் போன்று மொன்றியல் மலை உச்சியில் வல்மொறின் ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த பொங்கல் விழா கடந்த ஜூன் மாதத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

## தமிழ் விழாக்கள்

கனடாவில் இசை, நடனக் கல்லூரிகளுக்குக் குறைவில்லை. இத்துறைகள் சார்ந்த நிகழ்ச்சிகளும் அரங்கேற்றங்களும் ஏராளம். வாரந் தவறாது எங்கோ ஓர் இடத்தில் சதங்கை ஒலி கேட்கும். முத்தமிழ் விழாக்களும் சர்வசாதாரணம். யாழ்ப்பாணத்துப் பிரபல பாடசாலைகள் அனைத்திற்கும் கனடாவில் பழைய மாணவர் சங்கக் கிளைகள் உள்ளன. இவற்றின் வருடாந்தக் கொண்டாட்டங்கள் அனைத்தும் முத்தமிழ் விழாக்களாக மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துவனவாக அமைகின்றன. யாழ்ப்பாணத்துக் கிராமங்கள், தீவுகளின் பெயர்கள் விளங்க எடுக்கப்படும் விழாக்களுக்கும் குறைவில்லை. இத்தகைய அனைத்து விழாக்களிலும் பட்டிமன்றங்கள், சவியரங்கங்கள், மலர் வெளியீடுகள் ஆகியவற்றையும் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

தவத்திரு யோகர் சுவாமிகள், குடைச்சுவாமிகள் எனப் போற்றப்படும் கோண்டாவில் கந்தையாச் சுவாமிகள் போன்றோருக்குக் குருபூசை விழாக்கள் கொண்டாடும் தொண்டர்கள் பலரும் கனடாவில் இருக்கிறார்கள். ஸ்ரீசத்தியசாயி பாபாவின் பஜனை மன்றங்களும் பல நூற்றுக்கணக்கில் செவ்வனே இயங்கி வருவதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது.

திருக்குறள், திருவாசகம், சைவசித்தாந்த மகாநாடுகளுக்கும் இன்று கனடா பிரசித்திபெற்றஇடமாகியுள்ளது கனடா வாழ் தமிழ் மக்களுக்கென இரு தமிழ் வானொலிகள் இருபத்து நான்குமணி நேரமும் தமது சேவைகளை வழங்கி வருகின்றன. வார, மாத இதழ்களாகப் பத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளைப் படிக்கும் வாய்ப்புக்களையும் மக்கள் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த புகழ்பெற்ற நல்லாசிரிய சமூகத்தினர்கள், கவிஞர்கள், புலவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஓவியப் புத்துறையாளர்கள், சமயப் பிரமுகர்கள், கர்நாடக சங்கீத வித்துவான்கள், பரத நாட்டியவல்லுநர்கள், வைத்திய கலாநிதிகள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள் பலரை இன்று கனடாவிலும் சந்திக்க முடியும். இத்தகையோரது சேவைகள் கனடாவில் தமிழ் மக்களைத் தலைநிமிர வைத்துள்ளன எனலாம்.

## யாழ்ப்பாண மண்வாசனை

கனடாவிற் குடியேறியுள்ள இலங்கைத் தமிழ் மக்களிற் பெரும்பான்மையானவர்கள் யாழ்ப்பாண மக்களேயாதலால் இங்கு யாழ்ப்பாண மண் வாசனையே மிகுந்துள்ளது. தமிழ் மொழியையும் தமிழ்க் கலைகளையும் வளர்க்கத் துடிக்கும் ஆர்வலர்களுக்கும் இந்த நாட்டில் எதுவித பஞ்சமும் இல்லை. தமிழ் வியாபார நிலையங்களைப் பெரிய அளவிலான தமிழ்ப் பெயர்ப் பலகைகள் அலங்கரிக்கின்றன. ரொரன்றோ ஸ்காபறோவில் சங்கானைச் சந்தை என்னும் பெயரில் சந்தை ஒன்றுகூட நிறுவப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் யாழ். நகரில் பிரசித்தியாக விளங்கிய ''மொக்கன் கடை''யும் கனடாவிற்கு இடம்மாறிவிட்டது.

அனைத்து இனமக்களும் கனடாவில் தத்தமது தாய் மொழியைக் கற்பதற்கு வசதிகள் உள்ளன. ரொறன்ரோவில் பதினைந்துக்கு மேற்பட்ட கல்விச் சபைகளால் ஆரம்ப, இரண்டாம் நிலைகளில் பாடசாலைகளில் தமிழ்ப் பாடப் போதனைகள்நடத்தப்பட்டுவருகின்றன வருடாவருடம் ரொறன்ரோ பல்கலைக் கழகங்களில் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், கட்டடக்கலைப் பீடங்களுக்குப் பெருமளவு தமிழ் மாணவர்கள் தெரிவாகி வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார தொழிற் துறைகளில் முன்னேறி வரும் ஓர் இனமாகத் தமிழ் மக்கள் இன்று கனடாவில் இனம் காணப்பட்டுள்ளனர். தமது பழைய கிராமங்களில் விவசாயத்தில் பயிற்சியாயிருந்தவர்கள் கோடை காலங்களில் வீட்டுத் தோட்டங்களில் கீரை, காய்கறி வகைகளைப் பயிர் செய்து இன்புறுகிறார்கள். சுருங்கச் சொல்லின் யாழ்ப்பாண மக்கள் தமது அன்றாட வாழ்வில் எவை எவற்றையெல்லாம் கைக்கொண்டு இன்புற்று வாழ்ந்தனரோ, அவை அவைகளை அவர்கள் தமது கனடா வாழ்க்கையிலும் கைவிடத் தயாராக இல்லை. பூக்களாலான மணவறை கூட ஒழுங்கு செய்து கொள்ள முடியும் எனில் மற்றும் பல அம்சங்களை வாசகர்களின் கற்பனைக்கு விட்டு விடுகிறேன்.

## கறிமுருங்கையும் கந்தையாவும்

இலங்கை நாணய மதிப்பில் ஒரு கிலோ முருங்கைக்காய் 350 ரூபாவாகவும், கறி முருங்கை இலை ஒரு கிலோ 650 ரூபாவாகவும் கனடாவில் விற்பனையாகின்றன. இவை இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. யாழ்ப்பாணத்து அனைத்துக் காய்கறி வகைகளுக்கும் பஞ்சமில்லை. ஆனால் இவை யாழ்ப்பாணத்திலிருந்து இறக்குமதியாவதில்லை என்பதே எனது கவலை.

தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கியவர்களுள் ஒருவர் வி. ஏ. கந்தையா அவர்கள். பொதுக் கூட்டங்களில் யாழ்ப்பாணப் பொருளாதாரம் பற்றிப் பேசுகையில், கறி முருங்கை மரங்களைப் பற்றியும் அவர் பேசத் தவறுவதில்லை. வளவு வேலிகள் தோறும் பத்துக் கறிமுருங்கை மரங்களை நட்டு வளர்த்தால் அவற்றின் பெறுமதி என்ன என்று ஒரு கேள்வியைக் கேட்டு அவைகூடத் தமிழ் மக்களின் பொருளாதார நலன்களுக்கு உறுதுணையாக நிற்கவல்லவைதான் என விளக்கமும் கொடுப்பார். கனடாவில் கறி முருங்கை இலை இறக்குமதியாவதை அறிந்தவுடன் வி. ஏ. கந்தையா அவர்களின் நினைவே உடன்என் மனதில் எழுந்தது.

இன்றெல்லாம் யாழ்ப்பாணத்தில் வாங்கமுடியாத மிகத் தரம் வாய்ந்த வரகு அரிசியைக் கனடாவில் தாராளமாகப் பெற முடிகின்றது. சுத்தமான குரக்கன், ஒடியல் மா ஆகியவற்றையும் வாங்கமுடியும். கூழுக்குத் தேவையான பொருள்களைத் தம்மிடம் பெறலாம் எனும் விளம்பரங்களை வர்த்தக நிலையங்கள் பத்திரிகைகளில் வெளியிடுவதைப் பார்த்து ஒடியற்கூழ் குடிப்பதைப் போலநன்குஇரசிக்கமுடிந்தது

## குருக்கள் பதிவுகாரர்

குருக்கள், மணவறை, மண்டபம், மங்கள வாத்தியம், மிக உவப்பான சைவ போசனம், பூ அலங்காரம், உற்றார், உறவினரின் வசதிகள் அனைத்தையும் கருதி அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த தமிழ்த் திருமணங்கள் பல கனடாவில் நடத்தப்படுவதை பார்த்து என்னால் வியப்படையாமல் இருக்க முடியவில்லை, கோயில் குருக்கள்மார் பலர் திருமணப் பதிவுகாரர்களாகவும் கடமையாற்றுகிறார்கள்.

கோடை காலத்தில் யாழ்ப்பாணக் கிராமங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுக்களும் உற்சாகமாக நடைபெறுவதும் வழமையாகி விட்டதொன்றாகும்.

கனடாவில் சீரும் சிறப்பும் மிக்க ஒரு இனமாக வாழவும் வளரவும், பலமாகக் காலூன்றவும் தமிழ் மக்கள் ஆரம்பித்து விட்டனர். இவ்வேளையில் தமிழ் மக்கள் கனடாவில் குடியேறியுள்ளனர் என்ற சிந்தனையை விட கனடாவுக்குள் யாழ்ப்பாணம் நுழைந்துவிட்டது போன்ற ஒரு தோற்றமே எனது மனதிற்படுகின்றது. ★

உ
'எம் கடன் பணிசெய்தல்'
உடுவில் இந்து இளைஞர் மன்றம்
பாலர் விளையாட்டு விழா '99
இன்று மாலை 2-00 மணிக்கு
யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில்
தலைமை: திரு, தி. தியாகச்சந்திரன் (மன்றத் தலைவர்)
முதன்மை விருந்தினர்: கலாநிதி சபா. ஜெயராஜா (தலைவர், நுண்கலைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: திருமதி அ. முத்துக்குமாரசுவாமி (அதிபர், உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.
– மன்றத்தினர்
விளம்பர நிதி நல்கியோர்:
தர்மி வீடியோ, கொம்ப்ளெக்ஸ்
டச்சு வீதி, உடுவில். (67861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம்

ஆர். மணிவனம் (096270 ஏ), ஆர். ஆர். ராஜேஸ்வரன் (100114ஏ), எஸ். காரைசாமி (100429ஏ), வீ. எஸ். மோகன் (100429பீ), பீ. சிங்கராஜா (100429சீ), ஜி. எஸ். மோகன் (100429டீ), வீ. எஸ். மோகன் (100429ஈ), ஆர். எஸ். மோகன் (100429எவ்), பீ. நாகேஸ்வரி (100438ஏ), பீ. ஜெயந்தினி (100438பீ), எச். ஆர். விஜயலக்ஷுமி (104515ஏ), வீ. பாலசுப்ரமணியம் (104939ஏ), எஸ் பாலசுப்ரமணியம் (104939பீ), எஸ். ஜே. விமலராஜ் (107140ஏ), எஸ். கயல்விழி (107238ஏ), ஆர். சாந்தினிகுமார் (107238பீ), எஸ். மைனன் (107238சீ), ரீ. தர்மலிங்கம் (107246ஏ).

ரீ. யோகராஜினி (107246பீ), ரீ. சுரறி (107256சீ), ரீ. பரணவரன் (107246டீ), ரீ கனகாம்பிகை (107246ஈ), கே. கனகராஜா (107389ஏ), கே. புஷ்பராணி (107389பீ), வீ. தியாகலிங்கம் (107423ஏ), எம். தயானந்தன் (107423பீ). பீ. இம்மானுவேல் (107495ஏ).

ஏ. எஸ். செபஸ்தியான் பிள்ளை (107497ஏ). எஸ் பாலகிருஷ்ணன் (107534ஏ), பீ. தனுஷன் (107534பீ), கே. முருகமூர்த்தி (107536ஏ), பீ. சுரேந்தினி (109107ஏ), பீ. நிலாந்தி (109107பீ), பீ. சாரங்கி (109107சீ), பீ. அனோஜன் (109107டீ), எஸ். அசே கமலை (109148ஏ), எஸ். சுலோசனா (109148பீ).

கே. ராசதுரை (109179 ஏ), ஆர். ஆனந்தன் (109179 பீ), கே. கணேசையா (109184 ஏ), ஜே. சுதர்ஷன் (109184 பீ), எஸ். எஸ். செல்வநாயகம் (109219ஏ), எஸ். செபமாலைராணி (109219பீ). எஸ். றெனிசன் (109219சீ), எஸ். றெனோசிகா (109216 டீ), எம். சிவதாசன் (109227 ஏ), எஸ். மேரி மல்லிகா (109227பீ), எஸ். நிஷ்குமார் (109227சீ), எம். ஏ. ரி. சந்தியோகு (109245ஏ), என். சத்திபரூபன் (109260ஏ), கே. இந்திராதேவி (109275ஏ), ஏ தெய்வேந்திரன் (109287 ஏ). எம். பரமராணி (109298 ஏ), எம். ஜெயதர்ஷினி (109298பீ), எம் உமேஷ் (109298டீ), ரீ. ஜெயமணி (109357ஏ),

ரீ. யோகேந்திரன் (109356 பீ), ரீ. அரிராஜ் (109358)ஏ, என். நவராசதேவி (109359 ஏ), எம் கதிராசு (109367ஏ), எம் எம். விநோதனி (109396 ஏ), எம். எம். சந்திரா (109396 பீ) எம். எம் சுபாஷினி (109396 சீ), கே தவேந்திரன் (109406 ஏ), ரீ. விஜிதா (109406 பீ), சீ. மகேந்திரன் (109431 ஏ).

என். அன்னலட்சுமி (109444 ஏ), ஆர். டீ. பாலகாந்தன் (109450 ஏ), பீ. பிரியன் (109466 ஏ), வீ. கணேசலிங்கம் (109470ஏ). எம். கணேசலிங்கம் (106470 பீ), ஆர். பிரணவன் (109477 ஏ), ரீ. கோமளா (109481ஏ), ரீ. துஷ்பந்தன் (109481ஏ), எஸ். கோணேஸ்வரன் (109483 ஏ),, ரீ. சுதாசிதி (109487 ஏ).

எவ். ஆர். ஆர். நிக்சன் (109488ஏ), கே. நாகலிங்கம் (109501ஏ), எஸ் ராசமணி (109512ஏ), எஸ். வரதராஜா (109504ஏ), வீ. ரமியா (109504பீ), வீ. லாவணியா (109504சீ), வீ. ஜெபராணி (109504டீ), எஸ் நாகம்மா (109520ஏ), ஏ விஜயலெச்சுமி (109522ஏ), ஏ லபன் (109522பீ).

ஏ டனிஷ் (109522சீ) ஏ. சுசுஜிதன் (109522டீ), ஏ. தனுராஜா (109522ஈ), ஜே. ஜே. றுக்மன் (109525ஏ) ரீ பேசுதாசன் (109525பீ) ரீ. முத்துகுமார் (109527ஏ). எம். நேசமலர் ((109527பீ), பீ நாகேஸ்வரி (109527சீ). எவ் எம். சீ ஜலால்டீன் 109531ஏ). எவ் நெளெல் டின் (109531பீ)

ரீ மாலினி [109541ஏ], என். மீனாவதி [109557ஏ], ரீ. லோறன்ஸ் [109583ஏ], என். நவகுமரன் [112262ஏ], என். உதயகுமார் [112287 ஏ], ஜே. தவசிர்வாதன் [112291ஏ], கே. கனகரட்ணம் [112319ஏ], பீ. கனகரட்ணம் [112319பீ], ஏ. சகிலா [122327ஏ], ஏ. பொனராட் [112328ஏ],

ஏ. ஜே. ராகனி [112328 பீ), கே. தணிகாசலம் [112330ஏ], கே. நவதினம் [112339ஏ], கே. புஷ்பராணி [112339பீ], பீ. சத்தியராஜினி [112340ஏ]. என். கதிரகாமராஜா [112343ஏ], கே. சிறிதரன் [112344ஏ], எஸ். கஜேந்திரன் [112346 ஏ], டாக்டர் ரீ சிவபாதம் [112360ஏ[,

ஏ. பலீன்ஸ் [112371 ஏ], பீ. திரேஸ் [112371 பீ], எஸ். கமலநாதன் [112376 ஏ], எஸ் கமலானந்தா [112376 பீ], கே. பிறேமாவதி[112376 சீ] கே விஷ்ணுபிரியா [112376 டீ]. எஸ் சோதிநடன் (112378 ஏ) எஸ். தங்கலிங்கம் (112879 ஏ). கே. மேகனசுந்தரம் (112391 ஏ), கே. ஷாமினி (112391 பீ), கே. தக்ஷன் (112391 சீ),.

வீ சிவராஜசிங்கம் (112395ஏ). எஸ் நாகராஜா (112396 ஏ). ஏ. கந்தசாமி (112397ஏ), ரீ தம்பிப்பிள்ளை (112423 ஏ), ரீ. ரமணன் (112423 பீ), எஸ். ஏ. வில்லியா (112433 ஏ), ஆர். மகேஸ்வரன் (112444 ஏ), ஆர். லோகநாயகி (112445 ஏ), ரீ. குணராஜா (112455 ஏ), எஸ். பாலசிங்கம் (112479 ஏ), ரீ. ஆனந்தம் (112490 ஏ),,

ஆர். செல்வராஜா (112503 ஏ). கே. குகராஜா (112506 ஏ), கே. கந்தையா (112513 ஏ), எம். விஜயகுமாரன் (112522 ஏ), எஸ். கே. அரியரட்ணம் (112543ஏ), எஸ். ஏ. அரியரட்ணம் (112543 பீ), கே. துரைசிங்கம் (112559 ஏ), எம். ஜே. சூசைப்பிள்ளை (112586 ஏ), எவ் ஆர் ஜி. வேஜின்டன் (112589ஏ). ஜே மெற்றில்டா (112624 ஏ).

கே வீரசாமி (112688 ஏ) கே சூரியகுமார் (112689ஏ), எம். சக்திபசீலன் (12689பீ,) எஸ். சிறிபிரவிக் (112689சீ), பீ. டபிள்யூ டபிள்யூ பியசேனா (112705 ஏ). எஸ் பரமேஸ்வரி [112714 ஏ] ஆர். சபாரட்ணம் [112714 பீ,[ வீ பரமேஸ்வரி [112714 சீ], பீ. கிருஷாந்தி [112714 டீ].

(ஐ-ரி)

(தொடரும்)

---

## விற்பனைக்கு

- கட்டில்
- கதிரை
- மேசை
- அலுமாரிகள்
- உரல்
- அம்மி
- எலெக்ரிக்கல் சாமான்கள்
- தையல் மெஷின்
- பெரிய ஸ்பீக்கர் பொக்ஸ்
- சாஸ்குக்கர் மற்றும் சகல வீட்டுத்தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு.

**S. அரசக்கோன்**

7/2 K K S Rd . வண்ணார் பண்ணை (67837)

---

## மாட்டுவண்டில் சவாரி

யாழ்ப்பாணம், ஓக. 1

கோப்பாய் வடக்கு அம்மன் கோயிலடி சனசமூக நிலைய கட்டட வளர்ச்சி நிதிக்காக மாபெரும் மாட்டுவண்டில் சவாரி இன்று ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறும்.

(ரீ)

---

## 'சீடா' கொடுப்பனவு - 1998

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை

ஆகிய கல்விக்கோட்ட ஆசிரியர்களுக்கான 'சீடா' **1998** ஆம் ஆண்டுக் கொடுப்பனவினைப் பூரணமாக பெறாதவர்கள் **3-8-1999** அன்று யாழ் இந்து மகளிர்கல்லூரி கணிதவிஞ்ஞான வளநிலைய அலுவலகத்தில்

மாலை 4 — 6 மணிக்கிடையில்

உரியவர் மட்டும் சமுகமளித்துப்பெற்றுக்கொள்ளவும்.

'சீடா' இணைப்பாளர்.

[67839]

---

## கிணற்றில் விழுந்து மரணம்

கைதடி, ஓக. 1

கைதடி கிழக்கைச் சேர்ந்த எழுபது வயதுடைய முதியவர் ஒருவர் கிணற்றினுள் விழுந்து மரணமானார்.

கைதடி நுணாவிலில் உள்ள தோட்டக்கிணற்றில் நேற்றுக் காலை சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கைதடி கிழக்கைச் சேர்ந்த முத்துத்தம்பி செல்லத்துரை என்பவரே மரணமானவர்.

(74)

---

## UNDP - JRRP

யாழ் போதனா வைத்தியசாலையில் எம்மால் சமீபத்தில் புனரமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடத்தினை ஓர் ஆண்டு காலத்திற்குச் சுத்திகரிப்புப் பாரமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கான ஆர்வமுடையோரிடமிருந்து கேள்வி விவரங்கள் கோரப்படுகின்றன இதற்கான கேள்விக்கொத்தினை 125, கோயில் வீதியில் அமைந்திருக்கும் எமது காரியாலயத்தில் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளலாம்

இக்கேள்விக் கொத்தினைப் பூர்த்தி செய்து 09-08-1999 திங்கட்கிழமைக்கு முன்பாகக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கோரப்படுகிறது.

- திட்ட முகாமையாளர்

125, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8371)

---

உ

முருகன் துணை

## தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

# வருடாந்த மஹோற்சவம் - 1999

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 12-08-99 வியாழக்கிழமை ஆரம்பமாகி 26-08-99 வியாழக்கிழமை நிறைவுபெறும்

மஹோற்சவ விவரங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12-08-99 | வியாழக்கிழமை | கொடியேற்றம் | காலை | 7.35 | மணி |
| 15-08-99 | ஞாயிற்றுக்கிழமை | காலைத் திருவிழா | ஆரம்பம் | 8.00 | மணி |
| 20-08-99 | வெள்ளிக்கிழமை | பூங்காவனம் | காலை | 9.00 | மணி |
| 24-08-99 | செவ்வாய்க்கிழமை | சப்பறத் திருவிழா | மாலை | 5.00 | மணி |
| 25-08-99 | புதன்கிழமை | தேர்த்திருவிழா | காலை | 8.30 | மணி |
| 26-08-99 | வியாழக்கிழமை | தீர்த்தத் திருவிழா | காலை | 8.00 | மணி |

முக்கிய குறிப்பு: காலைத் திருவிழா 8.00 மணிக்கும் இரவுத் திருவிழா 4.30 மணிக்கும் நடைபெறும்.

ஆலய நேர்த்திக் கடன் மற்றும் அன்னதானம் செய்ய விரும்புபவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும், இசை நிகழ்ச்சிகள் நடத்த விரும்புவோர் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

ஆலய நிர்வாகம்

(67833)

அரியரத்தின ஐயர் லோகேஸ்வர ஐயர்.

---

## விற்பனையாகிறது

தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்
G.C.E. A/L, G.A.Q., BA.
**தி. மதிவதனன்**

G.C.E. A/L
அசேதன இரசாயனம்
**S. தில்லைநாதன்**

G.C.E. A L
ஆள் கூற்றுக் கேத்திர கணிதம்
**V. T. மதியழகன்**

GCE A/L, G.A.Q.
பொருளியல்
**வீ. பரமேஸ்வரன்**

G.G.E. O/L
கணிதம்
**V. T. மதியழகன்**

வெளிவந்துவிட்டது
**நுட்பம் - பகுதி 2**

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. 2573 [67840]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டன

நடேசு கௌரிமனோகரன் ஆகிய எனது 432291960V இலக்க தேசியஅ. அட்டையும் விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் J/121 (கொக்குவில் வட-கிழக்கு) கிராம சேவையாளரிடம் அல்லது கருவேம்படி லேன், கொக்குவில் என்னும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி/8374)

சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (480101022 V, 0907004520) தவறிவிட்டன. கண்டுடெடுத்தவர்கள் தயவு செய்து காரைக்கால் நடராசா பரியாரியார் ஆச்சிரமம், கோண்டாவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (67816)

துரைசிங்கம் சந்திரமோகன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0907016932) புத்தூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆவரங்கல் மேற்கு, புத்தூர் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (67817)

தங்கராசா தவநேசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை(791413206V), விசேட அடையாள அட்டை, வடமராட்சி வதிவிட அனுமதிப்பத்திரம் [Brigade 524 Pass] என்பன 23. 07. 99 அன்று யாழ். நாவலர் வீதிக்கும் நெல்லியடி, கரவெட்டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மே/பா சேகர கண்கணிப்புக் குரு, மெதடிஸ்த திருச்சபை, கட்டைவேலி, கரவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (67847)

# புனரமைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய்க்கிளையின் புனரமைப்புக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் சி.தர்சீசியஸ் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராகக் கோப்பாய்க் கோட்ட தவிக்கல்விப்பணிப்பாளர் செ சிவஞானசுந்தரமும் சிறப்பு விருந்தினராக அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் மு. விஸ்வலிங்கமும் கலந்து கொள்வர் [-3]

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Organ (CA-110, PSS-26), கிற்றார் (சைனா-3500/-)வயலின், மிருதங்கம் என்பனவும் குளிர்சாதனப் பெட்டிகள் (Sisil – 60, Usha) என்பனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: P. தேவகுமார் (தேவு), மூளாய் றோட், வட்டுக்கோட்டை. (67815)

நல்ல நிலையில் உள்ள 9 ஸ்ரீ தொடர் இலக்க Fiat – 124 Model கார் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்க்கப்படும். எந்த நேரமும் பார்வையிடலாம். தொடர்புகளுக்கு: இல. 113, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (67842)

நல்ல நிலையில் உள்ள ''வெஸ்பா'' ஸ்கூட்டர், 250 கிலோ Avery மேடைத் தராசு (இங்கிலாந்து) தேக்கினால் செய்யப்பட்ட காரியாலய மேசை (பெரியது) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [67860]

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் இரண்டு வீட்டுடன் மூன்று பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள விரும்புவோர் கொழும்பில் Mr Selvaraja, 15½ Wanderuat Place Dehiwala, T. P. No. 074 – 201725, யாழ்ப்பாணத்தில் Mr- K. Maheswaran, 37/22, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். (சி/8363)

## அபூர்வ ஜோதிட நிலையம்

பாவக்கிரகங்களிலிருந்து விடுபட நீங்கள் உங்கள் ஜாதகக் குறிப்புகளுடன் நாட வேண்டிய இடம்: அபூர்வ ஜோதிட நிலையம், ஆலடிச்சந்தி, UP 304, பலாலி வீதி, யாழ்நகர். ஆரம்பம்: இன்று 01-08-99 முதல் (67828)

## ஆண்டு 6 – 9

English, Maths விசேடமாக விடுதலைகளுள் (ஆண்டு 10, O/L) கற்பிக்கப்படும். நேரங்கள் காலை 6 தொடக்கம் மாலை 5 வரை தினமும் B.Sc ஆசிரியர், 85, சிவன்கோயிலடி. சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (67812)

## தேவை

வீட்டில் தங்கி இருந்து சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்யக் கூடிய முப்பது வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம். தொடர்பு: Dr. பொ. இராமநாதன் தாவடிச்சந்தி, கொக்குவில் (67796)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி. யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்). (67762)

இறைச்சிக்கோழிகள் (பாதி உட்பட) சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அடை முட்டையும் வாழைக்குட்டிகளும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67755)

இறைச்சிக்கோழி (Broiler), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (67858)

இறைச்சிக்கோழி (Broiler), விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 31, மானஸ் ஸ்கூல் லேன், உடுவில், சுன்னாகம். (67859)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதுடைய கனடாவில் பிரஜா உரிமை பெற்று நிரந்தர தொழில் புரியும் மகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை. சீதனம் பிரச்சினை இல்லை. அண்மையில் எடுத்த புகைப்படம், சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 919, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67820)

இந்து 45 வயதுடைய மணமகனுக்குப் பெற்றோர் கல்வியறிவுள்ள அழகான மணமகளை எதிர்பார்க்கின்றனர். சைவபோசனம், கிரகபாவம் 32 மற்றும் 30 வயதுடைய பட்டதாரி மணமகனுக்குத் தகுந்த மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றனர் தொடர்பு:விளம்பர இல.920, மே/பா உதயன். (67836)

வயது 40. சொந்தமாகத் தொழில் செய்யும் வாய் பேச முடியாதவருக்கு மணமகள் தேவை. பொறுப்பில்லாத தனியாக இருக்கும் நற்குணம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். இல. 921. மே/பா உதயன். (67856)

---

# தரம் 5 புலமைப் பரிசில் '99

# G.C.E. A/L '99

(கணித-உயிரியல்-கலை-வர்த்தகம்)

எம்மால் கொழும்பில் நடத்திய நாடு தழுவிய மாணவர் திறன் ஆய்வுப் போட்டிப் பரீட்சை வினாத்தாள்களும்

இறுதி நேர எதிர்பார்ப்பு வினாத்தாள்களும் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

## BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

69 A, W. A. சில்வா மாவத்தை, கொழும்பு – 06

Tel: 074-205198

(சி/ 8365)

---

# தசாக தின நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 07 | 23 |
| 02 | 07 |
| 1939 | 1999 |



அமரர்

## கதிர்காமக் குருக்கள் சதாசிவக் குருக்கள்

இறைமேனி தீண்டி எமக்குள் தந்து
கடமையே கண்ணாய்க் கருத்தில் இருத்தி
உச்சில் அம்மாள் பதமலர் ஒளியைக் காணக்
காட்டிய குருவெனப் போற்றுவோம்.

தகவல்:
ஆலய பரிபாலன சபை,
வழிபடுவோர் சபை.

உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

(சி/8364)

---

உ

சூரியபகவான் துணை

## சங்கானை தெற்கு ஓடக்கரை

## விசாலாக்ஷி சமேத ஸ்ரீ விஸ்வநாதசிவன் தேவஸ்தான

# உற்சவ விஞ்ஞாபனம்

| | | |
| --- | --- | --- |
| 02-08-1999 | காலை 9 – 11 மணி வரை அபிஷேக பூசைகள் மாலை 5 மணிக்கு சுவாமி வீதியுலா | |
| 08-08-1999 | வேட்டைத் திருவிழா | |
| 09-08-1999 | மாலை | சப்பறம் |
| 10-08-1999 | காலை | தேர் உற்சவம் |
| 11-08-1999 | காலை | தீர்த்தோற்சவம் |
| | மாலை | திருவூஞ்சல் |

உற்சவகுரு: சிவாகம கிரியாரத்தினம், சிவாகமஞான பாஸ்கரன், வேதசிவாகம ஞானபானு, ஈசான சிவாச்சாரியார்
சிவப்பிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்

தினமும் மாலை 6 — 7 மணிவரை தொடர் தெய்வீகப் பேருரை

" அறிவியல் நோக்கில் ஆன்மீகம் " என்னும் பொருள் பற்றி

பிரம்மஸ்ரீ காரை. கு.சிவராஜசர்மா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.


அனைவரும் வருக சிவனருள் பெறுக.

சுபம்.

[67843] — ஆலய நிர்வாகஸ்தர்

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## அம்பலவாணர் நடராசா

(வாமதேவா)

| வையகம் | வானகம் |
| --- | --- |
| 2-08-1927 | 11-08-1998 |

திதி: 01-08-1999

என்றும் உங்கள் நினைவால் துயருறும்...
மனைவி, மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(67841)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னிப் பாதை திறப்பு:

# அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழ் எம். பிக்களிடம் வற்புறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 1

வன்னிக்கு பாதை திறப்புக்கான சகல நடவடிக்கைகளுக்கும் நாடாளுமன்றத்தில் அரசுக்கு வழங்கும் ஆதரவைப் பயன்படுத்தி அழுத்தம் கொடுக்குமாறு சகல தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது —

நாடாளுமன்ற தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு:

வன்னிக்கான பாதை திறப்பு இன்னும் சாத்தியப்படாதது தங்களுக்குத் தெரிந்ததே. வன்னி மக்களின் அவலக்குரல் எமது காதுகளை துளைக்கிறது; உள்ளங்களை உருக்குகின்றது. உணவுப் பற்றாக்குறையினால் ஏற்படும் பட்டினிச் சாவு ஒருபுறம், தகுந்த மருத்துவ வசதிகள் இன்மையால் நோயாளர்களின் மடிவு மறுபுறம் இந்த அவலநிலையை நீக்க தாங்கள் முன்வரவேண்டும் என இக்கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

உணவை ஒரு ஆயுதமாக பாவிக்கின்றதாக மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள எண்ணத்தையும் சுட்டிக் காட்ட விழைகின்றோம். இப்படியான நிலைமையை நியாயப்படுத்தும் அவசரகால சட்டத்தை தாங்கள் கண்மூடித்தனமாக ஆதரிப்பது கவலைக்குரியது; எக்காரணங்கொண்டும் இப்பரிதாபநிலையை ஏற்பது எப்படி?

வன்னிக்கான பாதை திறப்புக்கான சகல நடவடிக்கைகளுக்கும் தாங்கள் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவைப் பயன்படுத்தி அழுத்தம் கொடுக்குமாறு மக்களின் சார்பில் தங்களைக் கேட்டுகொள்கின்றோம் — என்று உள்ளது.

## கொடிகாமம் - கச்சாய் வீதியில் பஸ் சேவை நடத்தக்கோரிக்கை

கச்சாய் வீதித்தடை அகற்றப்பட்டுள்ளதால் கொடிகாமம் கச்சாய் வீதியூடாக மீண்டும் பஸ் சேவையை ஆரம்பித்து இப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு உதவுமாறு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கச்சாய் கொடிகாமம் வீதி 5 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட நீளமுடையது. 90 வீதம் விவசாயிகளைக் கொண்ட இப்பகுதி மக்கள் தாங்கள் உற்பத்தி செய்த விவசாயப் பொருள்களை கொடிகாமம் சந்தையில் சந்தைப்படுத்துவதற்காக அதிக தூரம் நடந்தும் துவிச்சக்கர வண்டிகளைப் பாவித்தும் ஏற்றியிறக்கும் கஷ்டமான நிலையிலுள்ளார்கள்.

எனவே இப்பகுதி வாழ் ஏழை எளிய மக்களின் நன்மை கருதி சுமுமான காலத்தில் தாங்கள் நடத்தி வந்த பஸ் சேவையை மீண்டும் தொடர ஆவன செய்யுமாறு வேண்டுகின்றேன்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-5-ரி]

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட பரியோவான் முதலுதவிச் சங்கமும் படையினதும் ஏற்பாட்டில் இடம் பெறும் கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல 45, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள பணிமனையில் நடைபெறும்.

வருடாந்தப் போட்டிகள் நியமனக்கடிதம் வழங்கல், சமூகத்தின் தேவைகளும் பங்களிப்பும் பொதுச்சேவையும் போட்டித் தவிர்ப்பும் ஆகிய விடயங்கள் கலந்துரையாடப்படும்.

(ஐ-க)

## பஸ் தரிப்பிடத்தை இடம் மாற்றக் கோரிக்கை

வலி. கிழக்கு ஓக. 1

மீசாலை வடக்கு புத்தூர் சந்திக்கு அருகே அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடத்தை பயணிகள் மற்றும் பிரதேச மக்களின் நன்மை கருதி இடம்மாற்றி அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் மிக நீண்ட காலமாக பஸ் தரிப்பிடம் அமைந்திருந்த இடத்திலேயே புதிய பஸ்தரிப்பு நிலையத்தை நிறுவுமாறு மீசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலை முகாமையாளரை கடிதம் மூலம் கோரி உள்ளது.

இது விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைக்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கும் மேற்படி சங்கத்தினர் மகஜர்களை அனுப்பி உள்ளனர்.

சங்கத்தினால் விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று தென்மராட்சி பிரதேச செயலர் சிபார்சு செய்துள்ளார்.

புதிய பஸ்தரிப்பு நிலையம் புத்தூர்ச்சந்தி சோதனைச் சாவடிக்கு அருகே — அல்லாரை வீதிக்குப் பக்கத்தில் — நிறுவப்பட்டிருக்கிறது அது முன்னர் கண்டி வீதியில் மீசாலை வயல் வீதிக்கு முன்பாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

[ஐ-180]

**கணக்கீடு**

A/l 2000

கணக்கீட்டு நியமங்கள்

திங், வெள்ளி 6. 20 A. M.

ஆரம்பம்: திங். 2-8-99

By: BALAVASAN,

**சயன்ஸ் அக்கடமி**

நல்லூர்

(67863)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1

திருநெல்வேலி அபிராமி முன்பள்ளி லைய விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க. ஜெயாநந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ. வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(இ-9-7)

★ ★ ★

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாலர் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினரராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் 'கலாநிதி' சபா ஜெயராசாவும் சிறப்பு விருந்தினராக யாழ். உடுவில் மான்ஸ் வித்தியாலய அதிபர் திருமதி அ. முத்துக்குமாரசாமியும் கலந்துகொள்வார்கள்.

(இ)

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர்சங்கம் நடத்தும் ஆறுபேர்கொண்ட அணிகள் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். அங்கிலிக்கன் தலைவர் வண. எஸ். பி. நேசகுமாரும் சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் கே. இராஜதுரையும் கலந்துகொள்வர்.

(க)

★ ★ ★

மக்கள் வங்கியின் வடவலயமும் மக்கள் வங்கியின் யாழ். பிரிவு விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் 38ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடத் தலைவர் எம். நடராஜ சுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த ஆட்டத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலை வி. க அணியை எதிர்த்து வடபிராந்திய போக்குவரத்துச் சபை வி.க அணி மோதவுள்ளது.

[க]

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் அணிகளுக்கிடையேயான போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 8மணிக்கும், தனிப்பட்டவர்களுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறவிருக்கின்றன

(க)

## தெல்லிப்பழைத் துர்க்கையின் மகோற்சவம் 14 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

உற்சவம் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் பிற்பகல் 3 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் பிற்பகல் 2 மணிக்கு வைரவர் பொங்கலும் 3 மணிக்கு பூரணைத் திருவிழாவும் இடம்பெற்று உற்சவம் நிறைவு பெறும்.

மஹோற்சவத்தை முன்னிட்டு போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் குறித்து கடந்த 26 ஆம் திகதி வலி. வடக்குப் பிரதேச செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன

(க)

## உயிரினங்களின்...

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

படும் இதனையே சோதிடர்கள் தமது கணிப்புகள் மூலம் வெளிப்படுத்திபுள்ளனர். இதனை விடுத்துப் பூமி அழிந்துவிடும் என அர்த்தம் கொள்வது தவறு.

### சகாதேவன் சொன்னது

'மகாபாரதம்' என்ற காவியத்தில் வரும் சம்பவங்கள் இதற்கு உதாரணமாக அமைகின்றன.

மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையில் கடும்பகை ஏற்பட்டு போரின் விளிம்பில் வந்து நிற்கிறது. போருக்கான சகல ஏற்பாடுகளையும் இரு பகுதியினரும் செய்து வருகின்றனர்.

பாண்டவர்களில் இளையவனான சகாதேவன் ஒரு சோதிடஞானி. முக்காலமும் உணர்ந்தவன். இவனை அணுகிய கண்ணன், ''சகாதேவா! இந்தப் போரை நிறுத்தக்கூடிய ஒரு வழியைக் கூறு'' என்று கேட்கிறான்.

கண்ணனுக்குச் சகாதேவன் அளித்த பதில் பல உண்மைகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

''பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல் வண்ணா'' என்று கூறுகிறான்.

பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காக, நீயே இந்தப்போரை உருவாக்கினாய் என்ற அவன் பதிலில் பல முன் நிகழ்வுகள் அடங்குகின்றன.

பாஞ்சாலியின் சபதம் வீமனின் சபதம், குந்திதேவி கர்ணனிடம் பெற்ற வரம் போன்ற பல முன் நிகழ்வுகளுக்குப் பின் புலத்தில் நின்றவன் கண்ணன் போர் ஒன்று நடைபெறுவதற்கான ஏற்பாடுகளையும், அப் போரில் பாண்டவர் வெற்றி பெறக் கூடிய சாத்தியத்தையும் கண்ணன் உருவாக்கியிருந்தான். கௌரவர் பக்கம் அழிய வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் செய்யப்பட்ட ஏற்பாடுகள் அவை. ஆகவேதான் சகாதேவன் அவ்வாறு கூறுகிறான்.

இத்துடன் நிறுத்தாது அவன் மேலும் பின்வருமாறு கூறுகிறான்:

''கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி மாபாரதம் தீர்க்க மற்றுயார் கொல் வல்லாரே!''

போர் நுணுக்கங்களை உணர்த்திய உன்னைத் தவிர, வேறுயாரால் இந்தப்போரை நிறுத்த முடியும்? என்பதே அவனுடைய கேள்வியாகும். அதாவது போர் நடப்பதும் உயிர்கள் அழிவதும் தவிர்க்க முடியாத உனது ஏற்பாடு எனக் கூறுகிறான் சகாதேவன். காலத்துக்குக் காலம் அழிவுகள் ஏற்படும் என்பதை இது உணர்த்துகிறது. ★

**புத்தம் புதிய**

மோட்டார் சைக்கிள்கள், லாண்ட் மாஸ்ரர்கள்

**விற்பனைக்கு வந்துள்ளன**

BAJAJ 45 Champion
BAJAJ KB 125
HONDA CD 125 T Benley
HONDA C 90 New Model [on Light]
HONDA C 90 New Model
HONDA C 90 Lancer Custom Model [on Light]
HONDA C 90 Lancer Custom
HONDA C 70 Lancer Custom
HONDA C 50 Lancer Custom
HONDA C 90 Deluxe HA o2 Model
HONDA CF 50 Chaly Lancer New Model
HONDA CF 50 Chaly Old Model
HONDA CD 90 Benley New Model
HONDA CD 50 Benley New Model
HONDA MD 90
HONDA MD 70
LAND MASTERS — Direct Model [Brand New]
LAND MASTERS — Kubota K 75 [Re - Conditioned]

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**

103, 106, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

(சி/8385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலன் கொலைச் சம்பவம் கோபி அனான் கண்டனம்

கொழும்பு, ஒக. 1

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் கலாநிதி நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டதுக்கு ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் கண்டனம் செய்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரான நீலன் திருச்செல்வம் கொலை செய்யப்பட்டதை அறிந்து கோபி அனான் கடும் கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளார் என்று ஐ. நா. செயலர் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் கொலை ஒரு பயங்கரவாதச் செயல். அரசமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதிலான முயற்சிகளில் தீவிரமாகப் பாடுபட்ட நீலன் திருச்செல்வம் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காகச் சளைக்காமல் போராடியதுடன் இலங்கை இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளுக்குப் பெரும் பங்களிப்பையும் செய்தவர்.

செயலாளர் நாயகம் இந்த நடவடிக்கையை மிகவும் கடுமையாகக் கண்டனம் செய்கிறார். நீண்ட காலமாக வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் இலங்கையில் அர்த்தமற்ற வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதே கலாநிதி நீலன் திருச்செல்வத்துக்கு செலுத்தக் கூடிய மரியாதை ஆகும்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

நீலன் திருச்செல்வம் கொலை செய்யப்பட்டதை அமெரிக்காவும் கண்டனம் செய்துள்ளது. அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் சார்பில் அதன் பதில் பேச்சாளர் ரி. டெக்கர் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (இ-2)

## மன்னார்...

[முதலாம் பக்கத் தொடர்]

கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வன்னிக்கான போக்குவரத்துப்பாதை விடயத்தைகடந்த ஒரு மாத காலமாக படையினரும் அரசும் வேண்டும் என்றே இழுத்தடித்துவந்தன.

அதன் காரணமாக வன்னியில் உள்ள அவசர நோயாளர்களை வன்னிக்கு வெளியே கொண்டு செல்தற்கும், ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைகளை ஏற்கனவே திட்டமிட்டபடி நடத்துவதற்கும் உதவுவதற்காக மன்னார் கடல் மார்க்கமாக போக்குவரத்தை மேற்கொள்வதற்கு எமது அனுமதியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் கடந்த 25 ஆம் திகதி அரசுக்கு தெரியப்படுத்தி இருந்தோம்,

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, வவுனியா ஆகிய பல்கலைக் கழகங்களின் மாணவர்கள் வன்னியில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை நடத்தக் கோரியும் வன்னிக்கான போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்கக்கோரியும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் பகிஷ்கரிப்புப் போராட்டங்களை அரசாங்கத்துக்கு எதிராகத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றார்கள்.

வன்னியில் உள்ள ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களும் பரீட்சையை நடத்தக் கோரி அரசாங்கத்துக்கு சர்வதேச தொண்டர் அமைப்புக்களூடாக மகஜர்களை அனுப்பி வந்துள்ளனர்.

எனினும் படையினரும் அரசும் வன்னியில் ஜி சீ ஈ. உயர்தரப் பரீட்சையை நடத்துவது தொடர்பாக இதுவரை எவ்வித உருப்படியான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

ஆகவே இந்த நிலையில் அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக அனுப்புவதற்கும் —

எமது மாணவர்களின் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையை எந்தவிதத்திலாவது நடத்துவதற்கும்—

அல்லது இங்குள்ள மாணவர்களின் பரீட்சை ஒழுங்குகளை சீர்ப்படுத்தும் வரை பரீட்சையை பிற்போடுவதற்கும்—சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்ச்சியாகத் தொடர்பு கொண்டு வலியுறுத்தி வருகின்றோம்—என்றுள்ளது. (இ-6)

பிரமிட் வீடியோ
CD வெளியீடுகள்
சங்கமம்
கமாண்டர் சூர்யா
ஒருவன்
நெஞ்சினிலே
வாலி
நிலவேமுகம்காட்டு
புதிய படப்பாடல்கள்
சுப்பஸோ வீடியோ
149, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
(சி/8389)

## பரிசளிப்பு விழா

நெல்லியடி, ஒக. 1

வடமராட்சிப் பகுதியில் பொதுப் பரீட்சைகளில் திறமையான சித்திபெற்ற பாடசாலை மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவம் இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஏற்பாட்டில் இவ்விழா இடம்பெறுகின்றது. (ஐ-109)

## வானொலியில்

யாழ்ப்பாணம். ஒக. 1

யாழ். மத்திய கல்லூரியின் 183 ஆவது நிறுவுனர் தினத்தையொட்டி இன்று பகல் 12 15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் கல்லூரி அதிபர் க. இராசதுரையின் உரைஇடம்பெறவுள்ளது. [இ-5-6]

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

குலசிங்கத்தின் இடத்துக்கு முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும்—

கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரி. இராசநாயகத்தின் இடத்துக்கு பிரதேச செயலர் எஸ். ஐயாத்துரை நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் — தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்க அதிபர்களது திடீர் இடம்மாற்றத்துக்கான காரணம் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை.

இடமாற்றம் செய்யப்பட்ட அரசாங்க அதிபர்கள் இருவரும் உடனடியாக கொழும்பு வரும்படி கோரப்பட்டுள்ளனர் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது. [இ-6-21]

# உள்ளூராட்சி எழுதுநர்சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 1

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தை திருமலையில் நடத்த எடுக்கப்பட்ட முயற்சி பலனளிகாததால் அக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுதுள்ளது.

இது தொடர்பாக சகல உறுப்பினர்களுக்கும் தனித்தனியே அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் செ. சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தை திருமலையில் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது என்றும் ஆனால் குடாநாட்டில் உள்ள உறுப்பினர்கள் அங்கு செல்வதற்கான பிரயாணச் செலவை வழங்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளாததை அடுத்து கூட்டத்தை இங்கு நடத்த முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டின் பின்னர் இக்கூட்டம் கூட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ-15)

## இளம் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்)

வரும் அம்பாறை வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-21)

## குச்சவெளி...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினரின் பதில் தாக்குதலால் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் — நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (இ-6-21)

## 16 நாள்களாக...

(முதலாம் பக்கத் தொடர்)

வடபகுதி பார ஊர்தி உரிமையாளர் சங்கம் என்பன ஐ.நா. தூதரக அதிகாரிகளிடம் மகஜர்களைக் கையளித்ததைத் தொடர்ந்து இந்தப்போராட்டமும் கைவிடப்பட்டது.

பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அலுவலகம் முன் நடைபெற்றுவந்த மறியற் போராட்டமும் மாலை 4.40 மணியளவில் கைவிடப்பட்டது அங்கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. [இ-6]

## வன்னிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்)

தியுள்ளது.

வன்னியில் ஏற்பட்டுள்ள இந்த கொடிய பஞ்சம் வன்னிவாழ் உடன் பிறப்புக்களை பரிதாபமான, அனாவசியமான உயிரிழப்புக்களுக்கு இட்டுச் செல்லுமென்ற பயம் எம் இதயங்களைப் பீடித்துள்ளது.

பாலுணவு, மருந்துகள் இல்லாமல் கூக்குரலிடும் குழந்தைகளைப் பற்றிச் சிந்திக்க அன்புள்ள தாயாகிய உங்களை இரந்து கேட்கின்றோம்.

தற்போதைய இத்த இறுக்க நிலையை முடிவுக்கு கொண்டுவர உடனடி நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் அது தமிழ்மக்கள் மீதான மனிதாபிமானமற்ற அக்கறையீனமாகவும், பாராமுகமாகவும் எமது மக்களால் கருதப்படும்.

எனவே உங்களுடைய ஆட்சி அதிகாரத்தை இந்த வேளையில் முழுமையாகப் பயன்படுத்தி போக்குவரத்து தடையை நீக்கி, பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

இவ்வாறு [illegible] கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-5]

# தேசிய கூட்டுறவுச் சபையின் இயக்குநர் சபைக் கூட்டம்

## இங்கு நடத்த அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம், ஒக. 1

தேசிய கூட்டுறவுச் சபையின் வருடாந்த இயக்குநர் சபைக் கூட்டம் இவ் வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் லயனல் சமரசிங்க மற்றும் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த பத்து உறுப்பினர்களும் இன்று முதலாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

இன்று மாலை விமானம் மூலம் பலாலிக்கு வரும் இவர்கள் முதலில் பலாலி படைத்தளத்தில் வைத்து வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தனாவைச் சந்திக்கவுள்ளனர்.

நாளை இவர்கள் புனரமைக்கப்பட்டு வரும் வீரசிங்கம் மண்டபத்தைப் பார்வையிடுவதுடன் சேதமடைந்த யாழ். ப. நோ. கூ. சங்க கட்டடத்தையும் மற்றும் கூட்டுறவுக் கல்லூரியையும் பார்வையிடவுள்ளனர்.

அன்றைய தினம் யாழ். செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடலில் பங்கு பற்றும் இவர்கள் ப நோ. கூ. சங்கங்களின் ஊழியர்கள் மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளனர்.

மாலை 3 மணியளவில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் தேசிய கூட்டுறவுச் சபையின் வருடாந்த இயக்குநர் சபைக் கூட்டத்தையும் இவர்கள் நடத்தவுள்ளனர்.

மூன்றாம் திகதி இவர்கள் தமது யாழ். விஜயத்தை முடித்துத் கொண்டு கொழும்பு திரும்புவர். (ஐ-5-17-ரி)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக. 1

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் நடத்தப்பட்ட மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ-க-15)

## மிதிவெடியில் இளைஞன் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஒக. 1

இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரண் பகுதிக்குள் விறகு எடுக்கச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு வலதுகாலை கணுக்காலுடன் இழந்து படுகாயமடைந்தார்.

சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இளவாலையைச் சேர்ந்த கணபதி மகேந்திரம்[வயது 23] என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார், [ஐ-15]

## மன்னாரிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

களுக்கான ஐ. நா. தூதரகத்தின் வழித்துணையுடன் மன்னாருக்கு கொண்டு சென்றனர்.

நேற்றிரவு வரை மன்னார் பொலீஸ் நிலையத்தில் இந்த வினாத்தாள்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

இன்று காலை 7. 30 மணிக்கு மன்னார் கரையிலிருந்து 7 படகுகளில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் வினாத்தாள்கள் வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும்,

மன்னார் கரையிலிருந்து புறப்படும் இப்படகுகள் வன்னியில் படகுத்துறைக் கரை என்ற இடத்தில் நிறுத்தப்பட்டு அங்கு இவை இறக்கப்படும்.

சுமார் 4 மணித்தியாலங்களைக் கொண்ட அந்த கடற்பயணத்தின் மூலம் பகல் 12 மணிக்கு முன் படகுத்துறைக்கரைக்கு இப்படகுகள் சென்று விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

படகுத்துறைக் கரையில் வைத்து கல்வித் திணைக்கள அதிகாரிகள் சகிதம் பரீட்சை வினாத்தாள்களைப் பொறுப்பேற்கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் தரைமார்க்கமாக இவற்றை எடுத்துச் சென்று இன்று இரவுக்கு முன் குறிப்பிட்ட இடங்களை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் அனுமதி அட்டைகள் இன்று இரவு வன்னிக்கு கொண்டு செல்லப்படுவதால் பாடசாலை மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகளையும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில இடங்களில் இன்று பரீட்சார்த்திகளைக் கூடுமாறு நேற்றும் இன்றும் ஒலிபெருக்கிகள் மூலம் ஒவ்வொரு இடங்களிலும் அறிவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5-6-164-21)

## விசேட...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் நேற்று மாலை 5 மணிக்கு கனத்தையில் நடைபெற்றன. தர்மசிறி சேனநாயக்க, ஏ. எச். எம். பௌசி, ஸி. வி. குணரத்தினா, மங்கள சமரவீர, அலவி மௌலானா ஆகியோர் உட்பட 10 அமைச்சர்கள், 15 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஆகியோரின் அனுதாபச் செய்திகளும் இறுதி நிகழ்வில் வாசிக்கப்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின்உதய சூரியன் கொடி மற்றும் அவர் கல்வி கற்ற றோயல் கல்லூரியின் கொடி ஆகியவற்றால் போர்த்தப்பட்ட நீலன் திருச்செல்வத்தின் சடலம் அடங்கிய பேழை பலத்த பாதுகாப்புடன் கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு அவரது சடலம் தீயுடன் சங்கமமாகியது.

இறுதிக் கிரியைகளை முன்னிட்டு கொழும்பில் பொலீஸாரும், படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர். (இ-6)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-08-99 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org